அக்டோபரில் வெளிவருகிறது

**எதிர்பாருங்கள்!**




விவரங்களுக்கு :— **ஏஎல். ஆர்எம். கம்பெனி,**

32, ஆதியப்ப முதலி தெரு, வேப்பேரி, சென்னை.

புதிய பதிப்பு தயார் ! உடனே முந்துங்கள் !!

இம்மாதிரி பதிப்பு இதற்குமுன் தமிழில் வெளிவந்ததில்லை

# அனாதைப் பெண்

## டாக்கி நாவலின் அழகிய உயரிய பதிப்பு

"அனாதைப் பெண்" டாக்கீயிலிருந்து இப்பதிப்பில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு 36 ஆப்டோன் படங்கள் உயர்ந்த ஆர்ட்காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், புத்தகத்தின் விலையை மாத்திரம் அதிகரிக்கவில்லை யென்பதை நேயர்கள் கவனிப்பார்களாக !

இந்தப் புஸ்தகம் உங்கள் கைக்துப் பூஷணம் !
மனதுக்கு ஆனந்தம் ! யாவர்க்கும் இனியதோர் விருந்து !

**விலை ரூ. 1—4—0 தான்.**

**நாவலைப் படித்துப் படத்தைப் பாருங்கள்.**

---

"மாத்ருபூமி"யில்



K. K. பெருமாள்

(நந்தகோபால்)

# கானல் நீர்

அல்லது

# கபட உலகம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

48-ஆவது நாவல்

“ ஜகன்மோகினி ” ஆபீஸ்,

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்] [ரூபாய். 1-4.

" ஜகன்மோகினி " பிரஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை. (ருககள)

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.


| | | |
|---|---|---|
| மலர் 16 | பிரமாதி ஸூ புரட்டாசி மீ<br>அக்டோபர் 1939 | இதழ் 10 |


## திருமால் துதி

இன்பக் கடலே ! இறைஞ்சினேன் என்னுடைய
துன்பத் திடரொழிக்குந் தூயோனே ! — செம்பொற்
பதமளிக்கப் பாராயேல் பைந்தொடிசேர் மார்பா !
இதமடையும் காலம் எது ? 1

சாற்று மறையும் சதுர்முகனும் சங்கரனும்
போற்று பொருளைப் புகழாது—மாற்றரிய
மாணிழையார் மால்வலையில் மன்னிக் கிடந்துழல்வாய்
ஏணிலா நெஞ்சமே என் ? 2

செய்யாள் நின்மார்பிற் சிறந்தினிது வீற்றிருக்க
பையார் பணிப்பாயற் பள்ளியோய்—நையாது
கூர்வேல் விழியாள் குவலயத்து மாதின்பால்
ஆர்வமேன் கொண்டாய் அறை. 3

நின்னுணை யான்மறந்து நெஞ்சங் கருதியவா(று)
உன்னுது செல்லும் ஒருவேனை—எந்நாள்
கடைக்கணித்துக் காப்பாயோ கார்முகிலே யென்னை
விடக்கருதல் என்னோ விளம்பு. 4

—திரு. ராகவாசாரியர்.

# 71-வது ஆண்டு விழா



இன்று உலகமெங்கும் மகாத்மா என்று போற்றிப் புகழும் அருந்தவ சிரேஷ்டரான காந்திஜீயின் 71-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் பாக்கியம் நமக்குக் கிடைத்துள்ளது. சாந்தி ஜயந்தி அரசியல் அபிப்பிராயபேதமன்னியில், ஜாதிமதபேதமும் இல்லாமல் எல்லா இந்தியர்களும், கொண்டாடுவதற்கு உரியது. காந்திஜீ, உலகத்திலேயே சிறந்து விளங்கும் ஒரு மகான். அரசியலுக்கு ஒரு புதிய சேவையை அளித்திருக்கிறார். தர்ம நீதிக்கும் அரசியலுக்கும் நாமாக சிருஷ்டித்துக் கொண்ட ஒரு திரையை அகற்றியிருக்கிறார். அரசியலில் பொருளாதாரம், சமூக முன்னேற்றம், நீதி தர்மம் இவைகளை இணைத்து ஒரு ஒப்பற்ற ஆதர்சத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்.

காந்திஜீயின் கதர்இயக்கம், பொருளாதாரமுன்னேற்றத்தையும், தீண்டாமை ஒழிப்பு சமூக முன்னேற்றத்தையும், குடி ஒழிப்பு, குடி அரக்கனை விரட்டி தர்ம நீதியையும் ஸ்தாபித்துவிட்டது.

காந்திஜீயைப் பெற்றிருப்பது நமது பாக்கியம் என்று சொல்லிக் கொள்கிறோம். அவருடைய படங்களை வீடுகளில் வைத்துக் கொண்டாடுகிறோம். நாம் அவரை ஒரு அவதார புருஷர் என்று கூறி மரியாதை செய்கிறோம். ஆனால், இதில் நமது பொறுப்பையும் உணரவேண்டும். கிரியாம்சையில் அவரிடத்தில் நமக்குள்ள பக்தியைக் காட்டவேண்டும். நமது மனதில் ஏழைகளின் கஷ்டத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். காந்தி ஜயந்தியில் கதர் வாங்குங்கள். அதன் மூலமே இப்பொழுதுள்ள இருப்பு செலவழிந்து, இன்னும் ஏராளமான ஆடை தயார் செய்ய முடியும். ஏழைகளுக்கு உண்ண உணவும், இருக்க இடமும் தரிக்க ஆடையும் கொடுத்து உதவியவர்களாவீர்கள்.

கதர் வாங்குவது ஏழைகளுக்கு உணவு அளித்ததாகும். அதுதான் பஞ்ச நிவாரணமாகும். ஒரு அஹிம்சை வீரனின் உடை கதர்தான். சுதந்திரத்துக்கு வழி காட்டுவது கதர்தான். சுதந்திரத்தைக் காப்பாற்றுவதும் கதர்தான்.

—டாக்டர். பட்டாபி.

## சர்க்காவை ஆதரியுங்கள்

"சர்க்காவை கைக்கொள்ளுங்கள். கதர் உடுத்துங்கள். அப்படிச் செய்தால், நாட்டில் பஞ்சமே இருக்காது என நான் உறுதியாய்க் கூறுவேன். பஞ்சத்திற்கு ஏற்ற இன்ஷ்யூரன்ஸ் சர்க்காதான்."

—காந்திஜீ.

18037

# மகாத்மாவின் மணிவாக்கு

## ஹிந்துமதம்தழைக்க தீண்டாமைபோகவேண்டும்

கடவுள் அளித்த புனிதத் தொண்டான இந்தத் தீண்டாமையை ஒழிக்கும் விஷயத்தில் என்ன தியாகம் செய்யவேண்டியிருப்பினும் அது பெரிதல்ல. ஏனெனில், ஆயிரமாவது தடவை கூறுகிறேன்—ஹிந்து மதம் வாழவேண்டுமானால் தீண்டாமை போகவேண்டும். இருந்தால் ஹிந்து மதம் சாகும். பொறுமையின்றிப் பதட்டமாக இருந்தால் அது வெற்றிக்கு கேடு விளைவிக்குமென்பதைச் சீர்திருத்தக்காரர்கள் உணரவேண்டும். ஆலயத்திற்குப் போகும் பக்தர்கள் பெருவாரியானவர்கள் ஹரிஜனங்கள் ஆலயத்திற்குள் போவதை பிரத்யக்ஷமாக எதிர்க்கிறார்கள் என்பது தெரிந்தால், அந்த இடத்தில் ஒரு கோயிலைக்கூட திறக்கக்கூடாது.

தீண்டாமையைச் சட்டபலத்தால்கூட போக்கமுடியாது. தீண்டாமை என்பது கடவுளுக்கும், மனிதனுக்கும் இழைக்கும் ஒரு குற்றமென்பதைப் பெருவாரியான ஹிந்துக்கள் உணர்ந்து, என்று இதைக் குறித்து வெட்கப்படுகிறார்களோ அன்றுதான் இதை அகற்ற முடியும். இதை வேறு வார்த்தையில் கூற வேண்டுமானால், மனமாற்ற மென்பதாகும். அதாவது, பிராயசித்தம். ஆலய பக்தர்கள், டிரஸ்டிகள், ஜனங்கள் அத்தனை பேரும் ஹரிஜனங்களைக் கோவிலுக்குள் விட ஆவலாக இருந்தும், ஆனால் அப்போது அவ்விதம் செய்ய சட்டம் தடையாக இருந்தால், அப்போதுதான் சட்டத்தின் உதவியை நாட்டவேண்டும்.

## ஜயப்பூரில் அஹிம்சையின் வெற்றி

புத்திசாலித் தனத்திற்கு ராஜாவையும், ஜனங்களின் சார்பாக சேத்ஜி புத்திசாலித் தனமாகவும் நிதானமாகவும் சமரசப் பேச்சு நடத்தியதற்காகவும் பாராட்டப்படவேண்டும்.

நிதானமாகவும், கட்டுப்பாட்டுடனும் சாந்தமாகவும் நடத்தப்பட்ட ஒரு இயக்கத்திற்கு இது இன்பகரமான முடிவே. இது அஹிம்சையின் வெற்றி யாகும். ஆரம்பமுதலே தனக்கு வேண்டியதைத் தெரிவிக்கவும் அரசியல் உரிமைக்குமான குறைந்த பக்ஷம் என்ன வேண்டுமோ அதற்கான வகையில் கோரிக்கைகளை வகுத்துக்கொண்டனர். பொறுப்பாட்சி என்ற லக்ஷியம் எப்போதும் லக்ஷியமாகக் கொள்ளப்பட்டது. இந்த லக்ஷியம் புண்படுத்தும் விதத்திலோ, ஆக்ரமிக்கும் விதத்திலோ தெரிவிக்கப்படவில்லை.

உடனே பொறுப்பாட்சிதான் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்பதாக த்வனிக்கும் விதத்தில் வற்புறுத்தப்படவில்லை. பிரஜாமண்டலும் தங்களுடைய வரையறைகளையும், சமஸ்தானஜனங்களின் பிற்போக்கான நிலைமையும் புத்திசாலித்தனமாக உணர்ந்தது. அநேக ராஜபுதன சமஸ்தானங்களில் இதுவரை அரசியல் போதனை செய்யவே இடம் கொடுக்கப்படவில்லை. ஜெயப்பூரில் உண்மையான பிரஜா உரிமைகள் வழங்கப்பட்டால், அது ஒரு நல்ல லாபமே. இதுவும் ஜனங்கள் இதனை உபயோகிக்கும் புத்திசாலித்தனம் ஜெயப்பூர் அதிகாரிகள் காட்டும் தன்னடக்கம் ஆகியவைகளைப் பொறுத்தாகும்.

# செய்தித் திரட்டு

## போலந்தின் கதி

போலந்து பிரிவினை சம்பந்தமாக ஜெர்மன்-ரஷ்யா சர்க்கார்கள் ஒப்புக்கொண்டிருக்கும் எல்லைப்புற விவரங்கள் ஒரு ஜெர்மன்-சோவியத் கூட்டு அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சோவியத் எல்லைப்புறம், போலிஷ் கிழக்கு பிரஷ்ய எல்லைப்புறத்தில் நோவா கிராடுக்கு வடக்கே இருபது மைலில் ஆரம்பமாகிறது. மேற்கே மாட்லின் வரை போகிறது. அங்கிருந்து வார்ஸா வழியாக ஸான்டோமிபர்ஸுக்கு வடக்கே விஸ்துலா, சான் நதிகள் சங்கமம்வரை இருக்கிறது. பிரெம்ஸில் வழியாக வந்து லுப்கோவுக்கருகிலுள்ள ஹங்கேரிய எல்லைப் புறத்தை யடைகிறது. போலிஷ் ருமேனிய எல்லைப்புறம் பூராவும், போலிஷ் ருமேனிய எல்லைப்புறமும் சோவியத் சர்க்காரிடம் இருக்கும்.

இந்த எல்லைக் கோடு, ஆறுகளின் கரைகளை யொட்டியே இருக்கிறது. பிஸ்ஸா நதி, நாரு நதியுடன் சேருமிடம் வரை, பிறகு நாரு நதி பக்நதியுடன் சேரும் வரை, அங்கிருந்து பக்—விஸ்துலா சங்கமம் வரை, அதிலிருந்து விஸ்துலா நதியும் ஸான் நதியும் சங்கமமாகுமிடம் அங்கிருந்து ஸான் நதியின் உற்பத்தி ஸ்தானம் வரை. இந்த கோட்டுக்குக் கீழ்ப்புறம் ரஷியாவுக்கு, மேற்குப் புறம் ஜெர்மனிக்கு.

## தலைமயிரிலிருந்து கம்பளி

சமீபத்தில் ஓஸாகாவைச் சேர்ந்த கம்பளங்கள் தைக்கும் ஸ்ரீ. டோமமாட்ஸு யோஷினோ என்பவர் ரஸாயன ஆராய்ச்சிக்குப் பிறகு, மனிதனின் தலை மயிரிலிருந்து ஜவுளி நூல்கள், கம்பளி இவைகளைச் செய்வதில் வெற்றிபெற்றிருக்கிறார்.

ஓஸாகாவில் மாத்திரம் க்ஷவரம் செய்பவர்கள் தினசரி 1,200 பவுண்டு, மனிதரின் தலை மயிர் சேகரிக்கிறார்களென்றும் இதனால் கொஞ்சம் பருத்தி நூலை சேர்த்து 260 கம்பளங்கள் செய்யலாம் என்று அவர் கூறுகிறார். இந்த முறை பெரிய கைத்தொழிலாக்குவதில் வெற்றி பெற்றால், ஜப்பானுக்குத் தன்னைத் தானே கட்டிக்கொள்ளும் அளவு கம்பளி கிடைக்கும் என்று தெரிகிறது.

## ராம்கார் காங்கிரஸ்

பாபு ராஜேந்திரப் பிரசாதும், பீஹார் காங்கிரஸ் ஊழியர்களும் காந்திஜியின் யோசனையின் பேரில் டிஸம்பரில் காங்கிரஸ் செஷனை ராம்காரில் நடத்துவதென இறுதியாக முடிவு செய்துவிட்டனர். அப்பொழுது காங்கிரஸ் கண்காக்ஷியும் நடைபெறும். ராம்கார் காங்கிரஸ் டிஸம்பரில் கூடுமென்றும், தேதி விவரங்களை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அடுத்த மாதம் நிர்ணயிக்குமென்றும் உத்தியோகதோரணையில் அறிவிக்கப்படுகிறது.

18 OCT 19
MADRAS

## தமிழனுக்கு பரிசு

கோபிசெட்டிப்பாளையத்தில் உள்ள விவசாய டெமான்ஸ்டிரேட்டரான ஸ்ரீ. டி. கே. தங்கவேலுவிற்கு ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சி ஸ்தாபனத்தினர், ஒரு வெள்ளிமெடல் பரிசளித்திருக்கின்றனர். உணவுப் பொருள்களை மார்கட்டிற்கோ அல்லது சேமித்து வைப்பதற்கோ தகுதியானவகை செய்ய இயந்திரம் கண்டு பிடிப்பவர்களுக்கு இரு வெள்ளி மெடல்கள் பரிசளிப்பதாக மேற்படி சபையினர் அறிவித்திருந்தனர். "டர்மரிக் பாலிஷர்" (அதாவது மஞ்சளைச் சுத்தமாக்கி நைஸ்செய்து மார்க்கெட்டுக்குத் தகுதியானதாகச் செய்வது) என்ற இயந்திரம் கண்டுபிடித்ததற்காக ஸ்ரீ. தங்கவேலுக்கு ஒரு பரிசு அளிக்கப்பட்டது. இன்னொரு பரிசு அளிக்கப்படுவது சம்பந்தமாகப் பரிசுக் கமிட்டியினர் கூடிய சீக்கிரத்தில் தங்கள் முடிவை அறிவிப்பர்.

## சர். ஸி. வி. ராமனின் புதிய வெற்றி

ஜடப்பொருள் ('மாட்டார்') அமைப்பைப்பற்றி ஆராய்வதற்கு, தாம் கண்டுபிடித்திருக்கும் புதிய வழி ஒன்று சம்பந்தமாக பிரபல தமிழ் ஜடசாஸ்திர விஞ்ஞானியான டாக்டர் ஸி. வி. ராமன், இந்திய ஸயன்ஸ் அகாடமி கூட்டம் ஒன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர். இவருடைய புதிய முறை ஜட ரசாயன சாஸ்திரங்களுக்குப் பெரு உதவியாக இருப்பதுடன் பிரமாதமான மாறுதல்களை உண்டுபண்ணும். மின்சார வயலுக்கு பாயும் ஒளி ரேகையை முக்கோணக் கண்ணாடி மூலம் ஒரு பொருளுக்குப் பாய்ச்சுவதால் பொருளின் அமைப்பு நுணுக்கம் தெரியவருகிறதாம்.

## காந்தி சேவா சங்க மகாநாடு

காந்தி சேவா சங்கத்தின் ஆருவது மகாநாடு டெக்கா ஜில்லாவிலுள்ள சார் - லன்ட் என்ற இடத்தில் வருகிற பிப்ரவரி மாதத்தில் நடைபெறும். டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷ் உள்பட மூன்று பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த மகாநாடு ஒருவாரம் நடைபெறும். காந்தி சேவா சங்கத்தின் மெம்பர்கள் மட்டும்தான் அனுமதிக்கப்படுவார்கள். இந்தச் சமயத்தில் கதர் குடிசைத் தொழில் கண்காட்சி சாலைகள் நடைபெறும்.

## காங்கிரஸ் தேர்தல்கள்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி எல்லா மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை விடுத்துளது. அதில் எல்லோரும் கேட்டுக்கொண்டதன் பேரில் காங்கிரஸ் மெம்பர்கள் சேர்க்கும் காலம் நீடிக்கப்பட்டதென்றும் பிரதிநிதிகள் அ. இ. கா. மெம்பர்கள் அக்ராசனர் தேர்தல் ஏற்கனவே அறிவித்தபடிதான் நடக்குமென்ற நிபந்தனை பேரில்தான் இது நீடிக்கப்பட்டதென்றும், ஆதலால் பிரதிநிதிகள் தேர்தல் நவம்பர் மாதம் 8-ந் தேதி நடக்குமென்றும், முடிவான மெம்பர் ஜாபிதா நவம்பர் 1-ந் தேதியன்று தயாராகி இருக்கவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

---

**இன்றே கதர் வாங்குங்கள் !**

## சென்னை விற்பனை வரிச்சட்டம்

### அக்டோபர் 1-ந்தேதி அமுலுக்கு வரும்

சென்னை சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கை யொன்றில், அக்டோபர் 1௳ முதல், சென்னை விற்பனை வரிச்சட்டம் அமுலுக்கு வருகிறதென்று அறிவிக்கிறார்கள். சட்டத்தின் ஷரத்துக்களும், விதிகளும் அடங்கிய பிரசுரங்கள் சீக்கிரத்தில், எல்லா சர்க்கார் காரியாலயங்களிலும் விற்பனைக்கு தயாராயிருக்கும்.

பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருஷாந்தர வியாபார முள்ளவர்களுக்கு வரி கிடையாது. வருஷம் ரூ. 10 ஆயிரம் முதல், ரூ. 20 ஆயிரம் வரையில் விற்பனை செய்பவர்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் வரி; ரூ. 20 ஆயிரத்துக்கு மேல் விற்பனை செய்பவர்களுக்கு நூற்றுக்கு அரைரூபாய் வரி.

வியாபாரிகள் தங்கள் கணக்கு வழக்குகளைக் குறிப்பிட்ட நமூனாவில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த வரிபாக்கியை, நிலவரி பாக்கியைப்போல் வசூலிக்கலாம். இச்சட்டத்தின் ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம். தொடர்ந்து அக்குற்றம் செய்யப்பட்டால், நாள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம்.

வரித்தொகையை ஆக்ஷேபிக்க விரும்புபவர்கள் 30 நாட்களுக்குள் அப்பீல் செய்யலாம். விற்பனை வரிச் சட்டவிதிகளைப்பற்றிச் சர்க்கார் விடுத்திருக்கும் மற்றொரு அறிக்கையில் கோர்ட் டிகிரியின்படி நடத்தப்படும் ஏலங்களுக்கு வரிகிடையாதென்று கூறுகிறார்கள்.

அடமானம் வைக்கப்பட்ட சாமான், அல்லது செக்யூரிடியை ஏலம் போடுவதற்கும் வரி இல்லை. ஆனால் அடகுவாங்கும் தொழில் நடத்துபவர்கள் போடும் ஏலங்களுக்கு வரி உண்டு. ஒரு மாதத்தின் மொத்த விற்பனைவிவரங்களை அடுத்தமாதகடைசிக்குள் சமர்ப்பிக்கலாமென்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வியாபாரிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் இருந்தால், தலைமை ஸ்தலத்திலிருந்தே இதர கடைகளுக்கும், லைசென்ஸுக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

## தேர்தல் செலவை அனுப்பத் தவறினால்

சென்னை சர்க்கார் அறிக்கை கூறும் விவரம் :—

தேர்தலுக்கு நியமனம் அளிக்கப்பட்ட ஒவ்வொரு மெம்பரும் தனது தேர்தல் செலவின் விவரத்தைக் குறிப்பிட்ட தினத்துக்குள் சர்க்காரிடம் அனுப்பிவைத்து விடவேண்டும். தேர்தலிலிருந்து வாபஸ் வாங்கிக்கொள்கிறவர்களும் செலவு இனத்தைத் தாக்கல் செய்துவிடவேண்டும். இந்த விதியை மீறுகிறவர்கள் தேர்தலில் தங்கள் ஓட்டுஉரிமையை இழக்க நேரிடும். அதுமட்டுமல்ல. இன்னும் 5 வருஷங்களுக்கு அவர்கள் சட்டசபை தேர்தலுக்கு நிற்க முடியாது.

தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் தங்கள் தேர்தல் செலவினத்தைச் சர்க்காருக்குத் தாக்கல் செய்யத் தவறி விட்டால், ஒரு மாதத்துக்குள் தங்கள் மெம்பர்பதவியை ராஜிநாமாச் செய்ய நேரிடும்.

தேர்தலுக்கு நிற்கும் எல்லா மெம்பர்களும் அவர்கள் தேர்தல் ஏஜெண்டுகளும் இந்த விதியைக் கவனிப்பார்களாக. சாக்குப் போக்குக் கூறுவதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாது.

# புஸ்தக விமர்சனம்

ஸ்ரீமதி V. K. லக்ஷ்மிசௌரிராஜன்.

——(o)——

## (1) ஜோடிமோதிரம் (2) ராதாராணி

இவை, பங்கிம் சந்திர சட்டர்ஜி எழுதிய மூலத்திலிருந்து, ஸ்ரீ பரலி. சு. நெல்லையப்பரால் மொழிபெயர்க்கப்பட்டவை. விலை (1) அணு 4; (2) அணு 3. கிடைக்குமிடம்: "லோகோபகாரி" ஆபீஸ், சிந்தாதிரிப்பேட்டை.

பெயர்பெற்ற வங்க நாவலாசிரியர் பங்கிம் சந்திருடைய இவ்விரு குட்டிக்கதைகளின் மொழிபெயர்ப்பைப் படித்து இன்புற்ரும். கதைகள் மிகவும் ஸ்வாரஸ்யமாயிருக்கின்றன என்று பங்கிம் சந்திருடைய புத்தகங்களைப் படித்தவர்கட்குச் சொல்லவேண்டுவதில்லை.

மொழிபெயர்ப்பாளர் முன்னுரையில் சொல்லியுள்ளபடி ஜோடி மோதிரம் என்பது, ஹிரண்மயி, புரந்தரன் இவ்விருவருடைய காதலையும், தன் காதலுக்காக அரண்மனை வாழ்க்கையையும் அற்பமாக மதித்த ஹிரண்மயியின் உறுதியையும் சித்திரிப்பதாகும்.

ராதாராணி என்னும் கதை செல்வக்குடியில் பிறந்து தாயாதி வழக்கில் செல்வத்தையிழந்து வறுமையில் வருந்திக்கொண்டிருந்த ராதாராணி என்னும் சிறுமி, தனக்கு உதவிசெய்த இளைஞனைக் காதலித்து எப்படி பல ஆண்டுகள் கழிந்தபின்பு அவரையே மணாளனுகக் கொண்டாள் என்பதைச் சித்திரிக்கிறது. இவைகளைப் பங்கிம் சந்திரர் தமது மோகனசக்தி வாய்ந்த கற்பனையுடன் சிறந்த முறையில் எழுதியிருக்கிருர்.

## மாதர்க்குரிய மனோஹரக் கலைகள் 64

பண்டித ராம்பத்ர சர்மா எழுதியது. ஞானபண்டிதர் அச்சுக்கூடம், கிருஷ்ணம்பேட்டை, சென்னை. விலை அணு 9.

இப்புத்தகம் கிறிஸ்து பிறக்குமுன் இந்திய மாதர்கள் எத்தகைய கல்வியில் தேர்ந்து அறிவில் நிறைந்திருந்தார்களென்பதைக் காட்டுவதற்கான குறிப்புகள் என்று இந்நூலாசிரியர் சொல்லுகிருர். இப்புத்தகத்தில் பாட்டு, நடனம், சித்திரம் எழுதல் முதலிய கலைகளை எப்படி பழைய இந்திய மாதர் மேற்கொண்டு வந்தனர் என்பதைக் கூறுகிருர். புராணங்களிலிருந்தும் பழங் கதைகளிலிருந்தும் குறிப்புகள் கொடுத்திருக்கிருர். ஆனல், இக்கலைகளை இக்காலத்தவர் நன்ருய் அறிந்துகொள்ளும்படியான விஷயங்கள் இப்புத்தகத்தில் இருந்தால் நலம். கதைமாதிரி எழுதிக் கொண்டு போகிருர். இதில் இருக்கும் விஷயங்கள் நமக்குப் புதியனவாயும் யாவரும் அறியவேண்டிய விஷயங்களாகவும் அமைந்திருக்கின்றன என்பது இதை நோக்குவோர்க்குப் புலனுகும்.

# நீதி சந்திரிகை

நாடுகெட்டுப் பாடுமிக நண்ணியதால் எவ்விடத்தும்
ஓடெடுக்கும் கொள்கை உயர்ந்ததே!—பாடுபட்ட
சான்றோர் மிகத்தாழ்ந்தார் தண்ணியரும் மேலெழுந்தார்
தோன்றுகலி செய்யுந் தொழில். (உஅ)

பெற்றோரால் நட்பினரால் பெண்டிரால் பேருலகில்
உற்றோரால் எய்தும் உறுபயனே—முற்றும்
அறிந்தும் மடநெஞ்சே அல்லல்என இன்னும்
துறந்திலாய்க்(கு) உண்டோ ? சுகம். (உகூ)

நாரா யணாய நமவென்று அவன்அடியை
ஆராய்ந்து உணரும் அடியோர்க்கு—தீராத
வெம்பிறவி நீங்கும் : வினைஒழியும் : வீடென்னும்
செம்பொருளும் எய்தும் சிறந்து. (௩0)

நீதி சந்திரிகை முற்றிற்று.

—திரு. ராகவாசாரியர்.
*தலைமைத் தமிழாசிரியர், ஹிந்து ஹைஸ்கூல்,*
திருவல்லிக்கேணி.


## அடுத்த இதழில்!

சிறுபஞ்ச காவியங்களில் ஒன்றெனப்
புலவர்களால் கொண்டாடப்படும்
அரிய நூலாகிய
சூளாமணி
என்னும் காவியத்தின் சாரமாக
சுமார் நூறு வெண்பாக்களினாலான,
பண்டித. திரு. ராகவாசாரியர்
இயற்றிய
“ சூளாமணி வெண்பா ”
வெளிவரும்.

# வீடும் வாசலும்

["ஜகன்மோகினி" ஆசிரியை ஸ்ரீமதி வை.மு. கோதைநாயகி அம்மாள் 10-9-1939-ல் திருச்சி அகில இந்திய ரேடியோவில் பேசியது.]

**(Published by courtesy of All India Radio, Trichy Centre.)**

வீடும், வாசலும் என்கிற பதங்கள் ஒன்றுக்கொன்று எத்தனை அழகாயும் பொருத்தமாயும், பிரிவில்லாமலும் அமைந்திருக்கின்றனவோ அதேபோலத்தான் நம் வாழ்விலும் உள்ளும் வெளியும் வித்தியாசமின்றிக் கடவுள் அமைத்திருக்கிறார். அந்த அமைப்பின் லக்ஷணத்தில்தான் தொன்றுதொட்டு இன்றும் என்றும் அனேக வீடுகளும் அவ்வீட்டு மாதரசிகளும் அக் குடும்பங்களும் நமக்கு உதாரணமாக விருப்பதைப் பார்க்கிறோம்.

புத்தியிலோ, பரோபகாரத்திலோ, சாமர்த்தியத்திலோ, தருமத்திலோ மற்ற எந்த உயர்ந்த அம்சங்களிலோ தலை சிறந்து விளங்கும் வீட்டைத்தான் உதாரணம் கூறுவார்களேயன்றி, சோம்பேறிகளின் வீட்டைக் கூறமாட்டார்கள். "அதோ அந்த வீட்டைப் பாரு. எத்தனை லக்ஷணமாயிருக்கு; அந்த வீட்டுக்காரம்மாளோ வீட்டுக்கும் அதிகாரி; வெளிக்கும் உபகாரி. அப்படியன்னா இருக்கணும்" என்று நம் பாட்டிமார்கள் உபமானம் கூறவில்லையா? அத்தகைய வீடுகள் நம் பாரத நாட்டில் பண்டைக் காலந்தொட்டு இருந்து வருகின்றன. இதற்கு ஆதாரமாகப் பல காவியங்கள், சரித்திரங்கள் முதலியன இருந்தும், வீட்டுக்குள்ளிருப்பவள் வீட்டு வேலையைத் தவிர வேறு செய்யமுடியாதென்றும், செய்யக்கூடாதென்றும், செய்வது இளப்பம் என்றும் சொல்கிற ஓர் உணர்ச்சி சுமைபோல் இன்னமும் இருந்துகொண்டிருப்பதைப் பார்க்க ஆச்சரியமாயில்லையா?

வீடு வேறு வாசல் வேறு என்ற பாவத்துடனிருப்பவர்கள் "ஆமாம். அவளுக்கு வீட்டு ஞாபகமா! அக்கரையா! எப்போ பாத்தாலும் வெளியே சுத்துவாள். வீட்டைக் கவனிக்க முடியுமா என்ன?"—என்று இழிவாக ஒரு வார்த்தை. அதற்கு நேர் எதிரிடையாய் "ஐயோ பாவம்! வீட்டு வேலையைத்தவிர வேறு கவனிக்க முடியுமா என்ன? அப்படி செய்வதுதான் அழகோ!" என்ற வார்த்தையும் ஒருபுறம் ஒலிக்கிறது. இப்படிச் சொல்வது ஒன்றுக்கொன்று முரண்பாடான கொள்கையாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மேற்படியான மூடக்கொள்கை உண்மையாக விருக்குமாயின், பண்டைய காலத்தில் எத்தனையோ பெண்மணிகள் கல்வி கேள்விகளிலும் அரசாங்க விஷயங்களிலும் யுத்த அரங்கங்களிலும் கூடத் திறமையுடன் பிரகாசித்ததாக நாம் சரித்திரங்களில் பார்க்கிறோமே அவைகள் பொய்யா!

வீடு இல்லாமல் வாசலில்லை; வாசலில்லாமல் வீடில்லை. மணி இல்லாமல் ஓசையில்லை; ஓசையில்லாமல் மணி இல்லை. சூடில்லாமல் நெருப்பில்லை; நெருப்பில்லாமல் சூடில்லை. நாதமில்லாது சங்கீத மில்லை; சங்கீதமில்லாது நாதமில்லை. உயிரில்லாது உடலில்லை; உடலில் லாது உயிரில்லை. இவை எப்படி ஒன்றையொன்று ஒட்டி இருக் கின்றனவோ அதேபோலத்தான் சகலமும்.

ஒரு வீட்டுத் தலைவியின் உயர்ந்த லக்ஷணங்களும் உத்தம குணங் களும் அவ்வீட்டுக்கு மாத்திரமின்றி அவள் வளர்க்கும் குழந்தை களின் மூலம் உலகுக்கும், அடுத்த தலைமுறைக்கும் உதவுகின்றன. அவளுடைய உபகார குணத்தினால் அவளே பல குடும்பங்களுக்கு உதவியாயும் இருக்கிறாள். இப்போதும் நாம் சில கிராமங்களில் நேரில் பார்க்கிறோம். ஒரு பெரிய வீட்டுப் பாட்டி ஒருத்தி அவ்வூருக்கே ஒரு படைத் தலைவன்போல் உபகாரியா யிருக்கிறாள். "பாட்டியிருக்கிறாள் நமக்கென்ன கவலை?" என்று அவள் தலையில் பாரத்தைப் போட்டு விட்டு, அந்தப் பாட்டியின் உதவி மூலம் பல நன்மைகளை அனேக வீட்டினர் இன்னும் அடைகிறார்கள்.

என் சினேகிதை ஒருத்தி சொல்லுவாள். அது எனக்கு ஞாப கம் வருகிறது. எங்க கிராமத்தில் திருவேங்கிடி பாட்டி இருக்கிற வரைக்கும் எங்க ஊருக்கே பயமோ, கவலையோ இல்லை. எந்த வீட் டில் யாருக்கு ஒரு ஜலதோஷம் பிடித்தாலும் சரி! கர்ப்பமானாலும் சரி! கல்யாணங் காக்ஷி வந்தாலும் சரி! சாவு முதலியன நேர்ந்தா லும் சரி! அந்தப் பாட்டியின் கை மருந்து கஷாயங்களும், அன்பான தைரிய மொழிகளும் உயர்ந்த யோசனையும் கேட்காதிருக்க மாட் டார்கள். உபகாரப் பிராணின்னா அவளையன்னோ சொல்லணும் என்பாள்.

முன் காலத்தில் எத்தனை பணக்காரர்களாயிருந்தாலும் தங்கள் வீட்டு வேலைகளுடன், முக்கியமாகத் தம் குழந்தைகளைத் தாமே அக் கரையுடன் பால் கொடுத்து வளர்த்து வந்தார்கள். இந்தக் காலத் திலோ, எத்தனையோ பணக்காரர் வீட்டுப் பெண்மணிகளுக்கு வீட்டு வேலைகளுக்குத் தனித்தனி ஆள் இருப்பதால், அவ்வேலையும் இல்லை. அதுதான் இல்லையென்றால் தம்தம் குழந்தைகளுக்குத் தம் பாலைக் கொடுத்து வளர்ப்பதற்குக்கூட நாகரிகத்தின் வேகம் தடையாக அமைந்து தாதி வசமே வளர்க்க தம் குழந்தைகளை விட்டு விடுகிறார்கள். இதையோர் பெருமையாகவும் சிலர் பேசிக்கொள் கிறார்கள்.

தன் குழந்தைகளுக்குத் தான் புத்தி புகட்டி வளர்க்கும் உயர்ந்த முறையும் அன்பும் தாதிக்கு ஏற்படுமா? குழந்தையின் பிற் கால வளர்ச்சிக்கு அது எந்த வகையில் நன்மைதரக்கூடும்? வீட் டிலும் வேலையின்றி வெளியிலும் வேலையின்றி உட்கார்ந்திருக்கும் பெண்கள் அடையும் லாபமென்ன தெரியுமா! நோயாளிகளாகி விடுவதுதான். முற்காலத்தில் வீட்டிலும் ஓயாது வேலை செய்வ

துடன் வெளியிலும் தம்மாலான உதவிகளைச் செய்துவந்தவர்கள் ஒரு நோய் நொடி இல்லாது கல்லுபோல் இருந்தார்கள். வியாதி என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுவார்கள்.

இக்காலத்திலோ அதைப் பெருமையாய்ச் சொல்லிக்கொள்வது ஓர் உயர்வாக நினைக்கிறார்கள். ஒருவர் வீட்டுக் கல்யாணத்திற்கு வராதவர்களைப் பற்றி "என் உங்க பெண் வரல்லே?" என்று கேட்டால், உடனே 'ஐயோ! அவளுக்கு உடம்பே சரியில்லை. சதா மண்டை இடி...மார்வலி...இல்லையா?' இதுபோல பல்லவி பாடுகிறார்கள். இது பல இடங்களில் சகஜமாகி விட்டது. வீட்டிலும் துரும்பெடுத்துப் போடாது வெளி வேலையும் செய்யாது உட்கார்ந்திருப்பவர்கள் வீட்டில்தான் மேற்படி வியாதியும் வெகு உத்ஸாகமாகத் தாண்டவமாடுகிறது.

ஏதோ செல்வத்தின் மகிமையால் வீட்டு வேலைகளுக்கு ஆட்களிருப்பினும் அவர்கள் சமூகத்திற்கும், இன்னும் தம் மத விஷயத்திற்கும் என் பாடுபட முடியாது?...கூடாது?

எத்தனையோ பெண்கள் கிளப்புக்குப் போய் விளையாடுவதையே பெரிய வேலை செய்வதாக எண்ணுகிறார்கள். இதனால் சொந்தத்திற்கு மனச்சாந்தியும், தேகாப்யாசமும் உண்டாகிறதேயன்றிப் பிறருக்கு ஒருவிதமான உதவியுமிருப்பதாகத் தெரியவில்லை. தாம் விளையாடும் நேரத்துடன் கொஞ்ச அவகாசத்தையும் ஏற்படுத்திக் கொண்டு கால தேச வர்த்தமானங்களுக்கு ஒட்டிய விதத்தில் கூடுமானவரையில் பொதுஜனங்களுக்கு உபகாரமான முறையில் உழைத்தால் வெகு பிரயோஜனமாக விருக்குமல்லவா? இம்மாதிரி சில பெண்மணிகள் செய்தும் வருவதால் இது முடியாதென்று சொல்வதற்கே இடமில்லை.

தன்னுடைய இல்லற தர்மத்திற்கு விரோதமில்லாது குடும்பத்திலிருந்து, வீட்டு வேலைகளையும் செய்துகொண்டு, கணவனுக்கும் மனங்கோணாது பணிவிடைகள் செய்து உத்தமமான மக்களையும் பெற்று அவர்களையும் நல்ல மார்க்கத்தில் புத்தி புகட்டி வளர்த்துக் கொண்டே, வெளியிலும் சமமாகத் தம்மால் கூடுமான சமூகச் சேவையைச் செய்துள்ள பெண்மணிகளைச் சரித்திரத்தில் கண்டதுடன் இன்றும் நாம் பல குடும்பங்களில் கண்ணாரக் காண்கிறோம்.

நான் வெகு நாளைக்குமுன் படித்த ஓர் சரித்திரக் கதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு வீர மாது தன்னுடைய நான்கு குழந்தைகளையும், வயது முதிர்ந்த மாமியாரையும், கணவனையும் அவரவர் இஷ்டப்படி மனங்கோணாது சம்ரக்ஷித்து வந்தாள். அச்சமயம் அவ்வூரில் போர் முழக்கம் ஆரம்பமாகியது. அந்தப் போருக்குக் கணவன் வீர வாளேந்திக் கிளம்பிவிட்டான். அவனுக்கு தைரியங் கூறித் தேற்றி, ஜெயத்துடன் திரும்பிவரும்படியாக அவன் தாயார் ஆசி கூறினாள். மனைவியும் தன் கணவன் ஜெயம் பெற வேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்திப்பதாய்க் கூறினாள். அப்

போது கணவன் பார்த்த பார்வையின் குறிப்பை, அந்த வீராங்கனை, "கோண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்ற மூதுரைப்படி சடக்கென்று அறிந்துகொண்டாள். இந்த இடத்தில் பெருந்தேவனார் பாரதத்தில் கூறியுள்ள செய்யுள் எத்தனை பொருத்தமாக விருக்கிறது பாருங்கள்.

எப்பணியால் இன்புறுவர், காதலரக் காதலரை
அப்பணியா லப்போழுதே யன்புறுத்தி—யோப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்.

இந்தச் செய்யுளின்படி அந்த வீராங்கனை நாயகனின் விருப்பம் யாதென்பதைக் கணப்பொழுதில் உணர்ந்தாள். மாமியைச் சுற்றி வலம் வந்தாள். 'அம்மா! நானும் போர்க்களத்திற்கு உங்கள் மகனுடன் போகிறேன்' என்றாள்.

கிழவி வியப்புற்று, "அம்மா! கர்ப்பிணியான நீ போர்க்களத்தில் என்ன செய்வாய்? உன்னால் என்ன முடியும்?" என்றாள். அதற்கு அந்த நாரீமணி, "மாமீ! வாளேந்திப் போர் செய்யும் வகை இல்லையெனினும் போரில் அடிபட்டுக் கிடக்கும் வீரர்களுக்கு எனக்குத் தெரிந்த பச்சிலைகளை வைத்துக் கட்டிச் சிகிச்சை செய்து அவர்களுக்கு உழைக்க சக்தி இருக்கிறது. விடை கொடுக்க வேண்டும்" என்றாள்.

மேற்குறித்த சரித்திரத்தில் கண்ட வேலையையே இப்போதும் அடிபட்டவர்களுக்கு, "ஆம்புலன்ஸ் என்றும் ரெட் க்ராஸ்" என்றும் வகையில் பலவிடங்களில் பெண்கள் பணி செய்து வருகிறார்கள்.

எத்தகையோருக்கும் வீட்டு வேலைகள் 24 மணி நேரமும் இருக்கமுடியா தல்லவா! ஓய்வில்லாதவர்கள் நீங்க, ஓய்வு கிடைத்தவர்கள், "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்றபடி எழுத்தறிவில்லாத ஏழை ஜனங்களுக்குக் கல்வி தானம் செய்து ஞானக் கண்ணைத் திறக்கச்செய்யக்கூடாதா? இது இழிவான வேலையா? சந்நியாசினிகளாய் அனேக பெண்கள் மதப் பிரசாரமும் கல்விப் பிரசாரமும் செய்ததாகப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அதனினும் சிறந்த இல்லறத்தைச்செவ்வனே நடத்தியபடியே எத்தனையோ பெண்மணிகள், வீட்டுப் பணிபோலவே தம்மாலானவரையில் தமக்குத் தெரிந்த கல்வி அறிவாலும், புத்தி சாமர்த்தியத்தினாலும் பரோபகார குணத்தினாலும் வெளி விவகாரங்களையும் செய்து கீர்த்திவாய்ந்திருப்பதை யாராலும் மறுக்கமுடியாது.

புராணம், இதிகாஸம் முதலிய உயர்ந்த நூல்களை நாம் நமது மதத்தின் சாரமாகவும் ஆதாரமாகவும் அனுஷ்டித்து வருகிறோம். அதே புராணங்களில் கண்டுள்ள பல பெண்மணிகளின் செய்கைகளை மட்டும் நாம் மறந்துவிட முடியுமா!

"வீடும் வாசலும் ஒன்றல்ல. இது வேறு, அது வேறு" என்கிற மனப்பான்மையை உடையவர்கள் அதை முதலில் மாற்றிக்கொண்டு

விட்டால், பிறகு உலகில் கடவுளால் படைக்கப்பட்ட ஆண், பெண், இரு பாலரும் தம் தம் சக்திக்குத் தக்கவாறு,

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துல குவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்த லரிது.

என்ற நாலடியார் திருவாக்குப்படி ஒழுக்கத்துடனும், நீதி நெறியுடனும் தம்மாலாகிய பிற தொழிலையும் தாராளமாகச் செய்யலாம் என்ற உணர்ச்சி வெட்ட வெளிச்சமாக உண்டாகிவிடுமல்லவா!

பெண்கள் அடிமைபோல் வீட்டு வேலைகளை மட்டுந்தான் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஆதிகாலத்தில் இல்லையென்பதற்கு ஆதாரம், "நாடுமூரும் நனிபுகழ்ந் தேத்தலும்" என்கிற வளையாபதியிலுள்ள உயரிய வாக்கேயாகும். ஒரு ஸ்திரீ தன் வீட்டு வேலைகளைத் தவிர பிறருக்கு உபகாரப்படும்படியான அம்சத்துடன் விளங்காவிடில் அவளை நாடும், ஊரும் எப்படிப் புகழ முடியும்?

பெண்கள் எந்தக் காலத்திலும் அடிமைகளாகவோ, கல்வியறிவில்லாது பயந்தாங்கொள்ளிகளாகவோ இருந்ததில்லை. இடைக் காலத்தில் அமைந்த விதிவசத்தால்தான் பெண்களின் பெருமை குறையத் தொடங்கியது என்ற உண்மையைப் பலவித ஆதாரங்களோடு ஸ்ரீமான் திரு. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் இயற்றியுள்ள "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்கிற நூலில் வெகு விளக்கமாகக் காட்டியிருக்கிறார்.

சுமார் 30, 40 வருஷங்களுக்குமுன்பு பெண் கல்வி என்றால் தீயை மிதித்தவர்போல் நடுங்கினார்கள். அதை மிகவும் இளப்பமாயும் கொடுமையாயும் பேசித் தாக்கினார்கள்.

படிக்கப்புகுந்த வகுப்பாரையே ஜாதிக்கட்டும் சில இடத்தில் போட்டார்கள். அவ்விதமான பெரிய எதிர்ப்புச் சுழல் காற்றிலிருந்து தப்பியடித்துக்கொண்டு முன்னுக்கு வந்துள்ள உன்னதமான குடும்பங்களின் அறிவுச்சுடரையும் அவர்கள், வீட்டுக்கும் நாட்டுக்கும் செய்து வரும் அரிய சேவையையும் இன்று நாம் மனங் களிக்கப் பார்க்கிறோம். அவர்களை வழி காட்டியாய்ப் பிடித்துக் கொண்டு இன்னும் பலர் தைரியமாக முன் வந்தார்கள். அதன் பயனால் இன்று எத்தனையோ பெண்மணிகள் ஆடவர்களுக்கு மேல் அபாரமான படிப்புப் படித்துவிட்டு, அவர்களுக்குச் சமதையாக உத்யோகமும் செய்கிறார்கள்.

இவ்வளவு முன்னணியில் வந்துகொண்டிருக்கும் பொழுதும் பழயபல்லவி மறையாது ஒலிக்கிறதென்றால், வருந்தத்தக்கதேயன்றோ? உத்தியோகமும் செய்யாது வீட்டிலும் அதிக வேலை இல்லாத பெண்மணிகள் தம்மால் கூடிய வரையில் வெளி வேலை செய்வதில் ஈனமில்லை என்பதைச் செய்கையில் காட்டவேண்டும்.

பல பெண்மணிகளுக்கு வெளி வேலைகளைச் செய்வதற்கு அபாரமான ஆசை இருக்கிறது. ஆனால், வெகு நாட்களாக உள்ள பழக்கத்தின் வேகமும் பயமும் ஒன்று கூடி, பின்வாங்கச் செய்கிறது. இதற்குத் தைரியமின்மையே காரணமாகும்.

இரண்டாவதாக மற்றொரு காரணமும் இருக்கிறது. ஒரு பெண் தன் வீட்டு வேலையானதும் வெளியே கிளம்பிச் செல்கிறாள் என்றால், அக்கம் பக்கம் உள்ள பாட்டிமார்களும், அம்மாமிமார்களும் எட்டி எட்டிப்பார்த்து, ஏதோ விநோதத்தைக் கண்டதுபோல் பேசுவதும்...பிறகு தினம் போவதைப் பார்க்க வீதிக்கு மெனக்கட்டு ஓடி வருவதோடு நில்லாது, "ஏண்டியம்மா! எங்கே தினம் போரே! ஒங்க மாமியார் அனுப்பறாளோ! ஆம்படையான் பேசாமெ இருக்கானே?" என்றுங்கேட்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இந்த உபத்திரவத்தைச் சிலர் லக்ஷ்யம் செய்யாது தாம் எடுத்த காரியத்தை முடிக்கிறார்கள். சிலரோ, இதற்கே பயந்துகொண்டு பேசாது பின்னடைந்து விடுகிறார்கள். இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

ஆனால், நான் என்னுடைய இத்தனை வருஷகாலமான அனுபவத்தில் ஒன்று மாத்திரம் உறுதியாய்க் கண்டு கொண்டேன். அதாவது, எந்தக் காரியத்தையும் முதலில் செய்யும்போது எதிர்ப்பும், ஏசலும், குசமச வார்த்தைகளும் வருவது வெகு சகஜம். ஆனால், யார் இந்தமாதிரி ஏளனமாகவோ, வம்பாகவோ பேசினார்களோ, அவர்களே நாளடைவில் அதே காரியத்தைத் தாமே செய்துவிடுகிறார்கள். இது பெரிய மாறுதலான வேடிக்கையல்லவா!

வீடும் வாசலும் இரண்டும் ஒன்று தான். அது வேறு இது வேறல்ல. இரண்டிலும் சமமாக உழைக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். உழைக்க முடியும் என்றதுதான் நான் பல விடங்களில் பார்த்ததும், சொந்தமாக அனுபவத்தில் கண்டதுமான சித்தாந்தமாகும். இரண்டும் முரண்பட்டதென்கிற மனப்பான்மையை வெகு விரைவிலேயே சகோதரிகள் மாற்றிவிடுவார்கள் என்கிற நம்பிக்கையும் எனக்குப் பரிபூர்ணமாக உண்டு. இதிலுள்ள குற்றங் குறைகளை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்.

---

## காரியக் கமிட்டி அறிக்கைபற்றிக் காந்திஜி

உலக நெருக்கடி பற்றிய காரியக் கமிட்டி அறிக்கை இறுதியாக உருவாக நான்கு தினங்கள் பிடித்தன. கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்கி, பண்டித ஜவாஹர்லால் நேரு தயாரித்த நகலின் மீது ஒவ்வொரு மெம்பரும் தன்னுடைய அபிப்பிராயத்தை ஒளிவு மறைவின்றிக் கூறினர்.

பிரிட்டனுக்கு அளிக்கவேண்டுமென்ற உதவியெல்லாம் நிபந்தனையின்றி அளிக்கப்பட வேண்டுமென்று நான் கூறினேன். இதை ஆதரிக்க வேறு யாரும் முன் வாராததைக் குறித்து நான் வருத்தப் பட்டேன். இதைக் கலப்பற்ற அஹிம்ஸா வழிப்படியேசெய்ய முடியும். ஆனால் கமிட்டி

ஒரு மகத்தான பொறுப்பை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அது சுத்த அஹிம்ஸா மனப்பான்மையை மேற்கொள்ள முடியவில்லை. எதிரியின் பல வீனத்தை உபயோகிக்காமலிருக்கும்அளவுக்கு நாடு அஹிம்ஸாமுறையைக் கிரஹித்துக் கொள்ளவில்லையெனக் கமிட்டி கருதியது. ஆனால், தான் வந்துள்ள முடிவுக்குக் காரணங் கூறுகையில், கமிட்டி இங்கிலீஷ்காரர்களிடம் ரொம்ப தயவு தாக்ஷண்யத்தைக் காண்பிக்க விரும்பியிருக்கிறது.

அந்த அறிக்கையைத் தயாரித்துள்ளவர் ஒரு கலைஞர். ஒவ்வொரு ரூபத்திலும் அல்லது அமைப்பிலும் உள்ள ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் அவருக்கு மிஞ்சியவர் யாரும் இல்லாதபோதிலும், அவர் இங்கிலீஷ் மக்களின் ஸ்நேகிதரா யிருக்கிறார். அவர் சிந்தனைகளிலும், அவர் உருவாகியிருப்பதிலும், இந்தியரைவிட இங்கிலீஷ்காரர் போலவே யிருக்கிறார். அவர் நம்மவர்களைவிட இங்கிலீஷ்காரர்களிடையே பழகுகையில்தான், சர்வ சாதாரணமாக நடந்து கொள்கிறார். அவர் ஜீவகாருண்யம் நிறைந்தவர்; அதாவது எங்கு என்ன தவறு இழைக்கப்பட்டாலும் அவர் மனம் நோவுகிறது. அந்தத் தவறை ஒழிக்க விரும்புகிறார். எனவே அவர் தீவிர தேச பக்தராயிருக்கிற போதிலும், அவருடைய தேசபக்தி சர்வதேசியத்தினால் பிரகாச மடைகிறது.

இதனால் அந்த அறிக்கை அவருடைய (நேரு) நாட்டு மக்களுக்குமாத்திரமல்லாது பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் மாத்திரமல்லாது, இந்தியாவைப்போல சுரண்டப்பட்டிருக்கும் நாடுகள் உள்பட எல்லா தேசங்களுக்கும் விடப்பட்டிருக்கும் ஒரு விக்ஞாபனமாகும். அவர் காரியக் கமிட்டியின் மூலம் தான் சொந்த விடுதலையை மாத்திரம் நினைக்காமல், உலகில் சுரண்டப்படும் நாடுகளின் விடுதலையையும் கவனிக்குமாறு இந்தியாவைக் கட்டாயப்படுத்தி யிருக்கிறார்.

கமிட்டி அந்த அறிக்கையை நிறைவேற்றுகையில், அவருடைய விருப்பப்படி, அவரையே தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியையும் நியமித்தது. அக்கமிட்டி, நிலைமையின் போக்குக்குத் தக்கவாறு அப்போதைக் கப்போது நடவடிக்கை யெடுத்துக்கொள்ளும். காங்கிரஸ்காரர்களுக்குள் உள்ள எல்லா கட்சிகளும் அந்த அறிக்கையை ஏகமனதாக ஆதரிக்குமென்று நம்புகிறேன். அவர்களில் ரொம்ப சக்திவாய்ந்தவரும் அறிக்கையில் பலக்குறைவைக் காணமுடியாது. தேச சரித்திரத்திலேயே முக்கியமான தருணத்தில், போராட்டம் அவசியமென்றால் போருக்கு வேண்டிய பலம் கிஞ்சித்தேனும் குறைவாய் இராதென்பதைக் காங்கிரஸ்காரர்கள் நம்பவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் சில்லரைத் தகராறுகளிலும், கட்சி சண்டைகளிலும் ஈடுபட்டால், அது பரிதாபமாயிருக்கும். கமிட்டியின் நடவடிக்கையால் ஏதேனும் பெரிய நன்மையோ, அல்லது குறிப்பிடத்தக்க நன்மையோ கிடைக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் காங்கிரஸிடம் பரிபூர்ண விச்வாஸத்துடன் கலந்துகொள்ள வேண்டியது மிக்க அவசியமாகும். இதர ராஜீய கட்சிகளும், வகுப்புகளும், பிரிட்டிஷ் சர்க்கார் கொள்கை தெளிவாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையில் கமிட்டியுடன் சேர்ந்துகொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் யுத்த நிலைமையில் சாத்தியமானவற்றைச் செய்ய தயாராயிருக்கு மென்றும் நம்புகிறேன். ஜன நாயகத்திற்காக போர்புரிவதாகச் சொல்லும் பிரிட்டன், இந்தியாவையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள இதர நாடுகளையும் சுதந்திர நாடுகளாக

பாவிக்கவேண்டியது இயற்கையாக நடைபெற வேண்டியதென்றே எனக்குத் தோன்றுகிறது.

இது இல்லாத யுத்தமாக இருந்தால், அடிமை நாடுகள் மனச் சாட்சிக்கு விரோதமின்றித் தாங்களாகவே கலந்துகொள்ளாது. பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மனப்பான்மையில் புரட்சியேற்பட்டுவிட்டால் எல்லாம் சரியாகிப் போய்விடும். இன்னம் பட்டவர்த்தனமாகச் சொல்வதென்றால், யுத்தம் ஆரம்பமாகு முன்னரும், இப்பொழுதும் ஜனநாயகத்தினிடம் நம்பிக்கையிருப்பதாக பிரிட்டிஷ் மேடைகளில் பன்முறை கூறப்படுவதை நிறைவேற்றிவைக்க நேர்மையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பிரிட்டன், இஷ்டப்படாத இந்தியாவை யுத்தத்தில் மாட்டிவிட விரும்புமா? அல்லது உண்மையான ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வேலையில் தன் இஷ்டத்தின் பேரில் ஒத்துழைக்கும் இந்தியா இருக்க வேண்டுமென்கிறதா? "காங்கிரஸின் உதவி யென்றால் இங்கிலாந்து, பிரான்ஸ் பக்கம் மிகப் பெரிய ஆத்மீக சக்தியென்று அர்த்தம். ஏனெனில் காங்கிரஸ் அனுப்புவதற்கு அதனிடம் சோல்ஜர்கள் இல்லை. காங்கிரஸ் பலாத்காரத்தினால் போர் புரியவில்லை; அஹிம்சையினால்—இது எவ்வளவு அரை குறையாகயிருந்தாலும், எவ்வளவு பக்குவமாகாம லிருந்தாலும்—போர் புரிகிறது."

## சர். ராதாகிருஷ்ணன் அபிப்பிராயம்

"காரியக் கமிட்டியின் தீர்மானம், இந்திய மக்களின் ஆசைகளையும், சந்தேகங்களையும் பிரதிபலிக்கிறது. நாஜி கொடுங்கோலையும் ஆக்ரமிப்பையும் இந்தியா எதிர்க்கிறதென் பதை அத் தீர்மானம் ஸ்பஷ்டமாக்குகிறது. அதை எதிர்த்து, உலகத்தில் சமாதானத்தையும், சுதந்தரத்தையும் ஸ்தாபிப்பதற்கு இந்தியா தியாகங்கள் செய்யத் தயாராயிருக்கிறதென்பதையும் அத்தீர்மானம் தெளிவாக்குகிறது.

ஆனால், இந்த யுத்தம் இந்தியாவின் இப்போதைய நிலைமையை அப்படியே ஊர்ஜிதப் படுத்துவதற்காக நடத்தப்படுகிறதா அல்லது அவர்கள் சொல்லி வரும் சுதந்தரம் ஜனநாயகம் என்ற கொள்கைகளுக் கிணங்க இந்திய நிலைமையையும் முன்னேற்றுவதற்காக நடத்தப்படுகிறதா வென்று இந்திய தலைவர்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

யுத்தத்தின் நோக்கமென்னவென்பதைப் பற்றி இந்தியாவுக்குத் தெளிவாக உறுதிமொழியளிக்க வேண்டியது அத்தியாவசியம். இப்போதைய நெருக்கடியின்போது பிரிட்டனைத் தொந்தரவு செய்ய வேண்டுமென்ற விருப்பமுடையவர்கள் இந்தியாவில் யாரும் இல்லை. பேரம் பேசுவதற்கு ஆபத்துக்காலம் சமயமல்ல; ஆனால், சிறுநாடுகளின் சுதந்தரத்தைத் தாங்கள் உண்மையாகவே விரும்புகிறார்களாவென்று பிரிட்டன் தெளிவாக்குவதற்கு இதுதான் சரியான சமயம்.

யுத்தம் நீடித்து நடக்குமென்றும் எதிர்பார்க்கப்படுவதால், திருப்தியடைந்த இந்தியா பிரிட்டனுக்குப் பெருத்த ஆதரவாயிருக்கும். நாம் இப்போது மாறுதலடைந்த ஒரு உலகத்தில் வசித்துவருகிறோம். பழைய அமைப்பு இனி மாறித்தானாகவேண்டும். நாஜிஸத்தையும், பலாத்காரத்தையும் எதிர்க்கும் நாடுகள், ஒரு புதிய அமைப்பைச் சிருஷ்டிப்பதற்காக ஒன்று சேர்ந்தால், இந்தியா அவர்களுடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்கும். அதற்கு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சுதந்தர நாடுகளடங்கிய ஒரு பெடரேஷனாக உடனே மாற்றவேண்டும்."

லீலா கூறியவற்றைச் செவியுற்ற சுந்தரி, 'லபோ திபோ' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு "ஐயையோ! பெத்த தாயாரை இம்மாதிரி பதைக்கப் பதைக்கக் கூற உனக்கு எப்படி யடீ மனம் துணிந்தது? பெத்த தாயாரின் மனம் பத்தி எரியச் செய்தால் அது உனக்கு க்ஷேமந்தானடீ? உன் மூளையைக் கலைத்துக் குட்டிச் சுவராக்குவதற்கா இந்தப் பாதகிகள் இங்கு வந்து சேர்ந்தார்கள்?...

என்று சொல்லி முடிப்பதற்குள், லீலா ஓர் பெரிய கோபச் சிரிப்புச் சிரித்து முழித்துப் பார்த்தபடியே, "அம்மா! நிறுத்து. "பெத்த தாயின் மனம் எரியச் செய்தால் க்ஷேமமில்லை" என்கிற வேதாந்தம் இப்போதுதான் தெரிகிறதா! உன் கர்ப்பத்தில் ஊறிப் பிறந்ததனாலேயே உன் இரும்பினும் கொடிய கடின இதயம் எனக்கு வந்து விடாது. என் பாட்டியை நீ படுத்தி வைத்தப் பாட்டையும், அடித்துத் துரத்திய வயித்தெரிச்சலையும் நீ சற்று நிதானமாக எண்ணிப் பாரு. அந்த ருசி இப்போது எப்படி யிருக்கிறதென்று சற்றுநேரம் அனுபவித்துப் பாரு. அப்பத்தான் உண்மை நிலை விளங்கும். பதருதே!

அம்மா! என் க்ஷேமத்தை நீ உண்மையில் பெத்த தாயைப் போல் கோருபவளாயிருந்தால் உன் மனந்துணிந்து என்னை ஓர் பயித்தியத்திற்குக் கட்டிக்கொடுக்க இசைந்திருப்பாயா! என்னை யோர் கருவியாக உபயோகித்து இந்தப் பணத்தை உங்கள் சோதா செட்டுக் கூட்டத்துடன் நாசம்செய்து கும்மாள மடித்து வயிறு வாழ எண்ணியல்லவா செய்தீர்கள்?

நான் மனப் பூர்வமாய் அவருக்கு மாலை இட்ட பிறகு இனி அவருடைய சகல நன்மைகளுக்கும் நான் பாத்தியப்பட்டவளாகி விட்டேன். அவருடைய மூளைதான் கோளாறேயன்றி, என்னுடைய மூளைக்குக் கோளாறு ஏற்படவில்லை. கண்கள் பொட்டையாகவும் ஆகவில்லை. உங்கள் பேராசையின்படி அநியாயமான வழியில் செலவிடவும், சினிமாக் கம்பெனி வைத்துத் தூர்க்ருதமாய்க் கூத்தடிக்கவும் இந்த ஜெமீன் சொத்தில் ஒத்தை சல்லிக்கூட போகாது. ஜாக்கிரதை! உங்கள் செய்கையே உங்களுக்குப் பலன் கொடுக்கும்.

அம்மா! இப்போதும் சொல்லுகிறேன். பெத்தவர்கள் என்கிற தோஷத்திற்காக, நீங்கள் பழைய அட்டகாஸத்தைவிட்டு, குறியும் குணமுமாக இருந்தால், இந்த இடத்தில் தாராளமாய் வந்து இருங்கள். இல்லையேல் உங்கள் விதி விட்டபடி நடவுங்கள்" என்று கடுமையான தொனியில் கூறினாள்.

அதற்குமேல் சுந்தரியால் அங்கு நிற்கமுடியவில்லை. அவளுடைய சகாக்களுக்கு ஆத்திரம் தாங்க இயலவில்லை. "சுந்தரீ! வயிற்றில் பிறந்ததே வைரியாக ஆகிவிட்டபிறகு இங்கு உனக்கு என்ன வேலை? உனக்கு வெட்கமில்லை. வா போய்விடலாம். இந்த வதையை அனுபவிக்கட்டும்" என்று நல்ல உத்தமபத்தினிகளடங்கிய அந்த வீண் கூட்டம் கூறியது.

இதைக் கேட்ட லீலாவுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்து விட்டது. அவர்கள் முகத்தைப் பார்த்து பதில் பேசாது ஏளனமாக நகைத்தபடியே, "தர்வான்! தர்வான்! இந்த அம்மாமார்களுக்கு வழி தெரியவில்லையாம். கொண்டுபோய் கேட்டுக்கு வெளியே ரோட்டில் விட்டுவிட்டு வா!" என்று கம்பீரமாக ஒரு உத்தரவிட்டாள்.

பர்மாக்காரனாகிய தர்வான் தடதடவென்று வந்தான். அவன் வருவதைப் பார்த்ததும் பயமும் ஆத்திரமும் ஒன்று கூடிய அந்தக் கூட்டத்தினர் தாறுமாறாகத் திட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். லீலா அவர்களின் காதில் விழும்படியாய்க் கடகட வென்று பெரிதாக நகைத்தாள்.

அடுத்த நிமிடமே ரத்தினமும் அவன் சகாக்களும் இவ்விஷயத்தை அறிந்தார்கள். கோபத்தில் ருத்திரன் குரு விச்வாமித்திரன் என்பார்கள். அவர்களைவிட அதிக ஆத்திரத்துடன் ரத்னம் அங்கு வந்து, "அடீ லீலா! குடியைக் கெடுக்கும் கோடரிக்காம்பே! உன் தாயாரையா நீ தர்வானை விட்டுத் தள்ளச் செய்தாய்? அஹ்ஹா! அத்தனை தைரியமும் துணிபுமா உனக்கு வந்துவிட்டது. உன்னை நீ என்னவென்று நினைத்திருக்கிறாய்?"

என்று முடிப்பதற்குள், "அப்பா! நிறுத்துங்கள்; இங்கு ஸ்திரீகள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து பேசுங்கள். தயவு

செய்து உங்கள் சகாக்களை வெளியே துரத்துங்கள். என்னை நான் என்ன நினைத்திருக்கிறேன் என்று கேட்கிறீர்கள்? நிரபராதியான பெத்த தாயாரைத் தள்ளாதவயதில் வீட்டைவிட்டுத் துரத்திய புண்ணியவானின் பெண் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

அதோடு, சீட்டாட்டச் சண்டையில் அநியாயமாய் ஒரு குடும்பத்தின் தலைவனின் கண்ணை அவித்து அவன் குடும்பத்தைச் சிதற அடித்த மகா மோசக்காரனின் வயிற்றில் நாம் ஏன் பெண்ணாய்ப் பிறந்தோம் என்றுதான் நினைத்திருக்கிறேன். பின்னும், கணக்கற்ற அக்கிரமத்தை மனந் துணிந்து செய்யும் பரம புருஷராகிய உங்கள் மகள் என்றுதான் நினைத்திருக்கிறேன். அப்பா! இப்பவும் கடைசீ தரமாகக் கூறுகிறேன். பெத்த தோஷத்திற்காக, நீங்கள் இருவரும் வேண்டுமானால் இந்த இடத்தில் மரியாதையுடன் வந்து இருங்கள். இல்லையேல், அதோ அதுதான் வழி" என்று கடுமையான ஆத்திரத்துடன் கூறினாள்.

ரத்தினத்தின் சகபாடிகளுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்து விட்டது. திமிர்பிடித்த சோதாச் சிரிப்பு ஒன்று சிரித்துக் கொண்டே, "ஏண்டீ லீலா! பயித்தியத்தைக் கட்டி இருக்கும் போதே உனக்கு இத்தனை கர்வமும் அகம்பாவமும் வந்துவிட்டதென்றால், நல்ல புத்திசாலியான பையனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தால், நீ தலைகீழாய்த்தான் நடப்பாய்போல் இருக்கிறது" என்று முடிப்பதற்குள், பக்கத்து அறையிலிருந்து விரைக்க விரைக்க கோபத்துடன் பார்த்துக்கொண்டே நம்மாழ்வார் அங்கு வந்து அவர்களை நோக்கி, "ஆமாம். பயித்தியம் உங்களைக் கல்லாலடிக்கும்; பல்லால் கடிக்கும்; துணியைக் கிழிக்கும்: உங்களைத் துரத்தியடிக்கும். ஆகையால், இங்கு நிற்காதீர்கள். உம். போங்கள்: போய் விடுங்கள்" என்று மேலே பாய வந்தான்.

இதைக்கண்டதும் ரத்தினத்திற்கும் மற்றையோருக்கும் அப்படியே தூக்கிவாரிப்போட்டது. அவர்கள் மிரள மிரள விழித்தபடியே, "என்ன! நம்வாழ்வாரா இவன்! இவனா நம்மாழ்வார்?" என்று முடிப்பதற்குள், "ஆமாம்! நான்தான் நம்மாழ்வார். சந்தேகமே வேண்டாம். மரியாதையாக வெளியே போகிறீர்களா

அல்லது தர்வானைக் கூப்பிடட்டுமா ?" என்று முடிப்பதற்குள், ஜமீந் தாரின் காரியஸ்தனாகிய தடித்த மனிதன் கையில் ரிவால்வருடன், அங்கு பிரஸன்னமாகி "நம்மாழ்வார்! நீ இரு அப்பா! லீலா! நீ உள்ளே போம்மா! நான் பார்த்துக்கொள்கிறேன். இந்தப் பிர புக்களை விரட்டுவதற்கு தர்வான் எதற்கு?" என்று கூறிக்கொண்டே ரத்தினத்தை நோக்கி, "சார்! சம்மந்தி சார்! உம். நடவுங்கள். அதோ அப்படித்தான் வழி. இனிமேல் உங்கள் பாச்சா இங்கே பலிக்காது. நடவுங்கள்; நடவுங்கள்.

சார்! இன்ஷியூரன்ஸ் கம்பெனி பணத்தை லபக்காஎஸ்வாஹா செய்த பெருமைக்காக மகா சிரேஷ்டராகிய உங்களை அதோ வீதியில் போலீஸார் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். போய் வாருங்கள். இல்லாவிட்டால், இங்கேயே வரச் சொல்கிறேன்" என்றான்.

இதைக் கேட்ட ரத்தினத்திற்கு இடி இடித்த மாதிரியாகிவிட் டது. போலீஸார் என்ற வார்த்தை காதில் பட்டவுடனே கூட இருந்த சகாக்கள் மூலைக்கொருவராய்ப் பிய்த்துக்கொண்டு ரத்தி னத்தை விட்டு விட்டு ஓடவாரம்பித்தார்கள். அவர்கள் பின்னோடு ரத்தினமும் ஓடப்பார்த்தான். ஆனால் அதுவரையில் போலீஸ் இன்ஸ் பெக்டர் ஏகாம்பரம் காக்கவைக்கவில்லை. உடனே ரத்தினத்தின் முன்பு வந்து அரெஸ்டு வாரண்டைக் காட்டி அப்படியே அவனைப் பிடித்துக் கொண்டார்.

அதேசமயம் லீலா தைரியமாக "அப்பா! இப்பவாவது தெரி கிறதா, அற்ற குளத்தில் அருநீர்ப் பறவைபோல் என்ற முதுமொழியின் மாண்பு! உங்களைச் சுற்றி இருந்த விஷப்பூச்சிகள் சமயத்தில் உம்மைவிட்டு விட்டு ஓடிவிட்டதுபோல் உங்கள் பெத்த தாயார் ஓடிப்போவாளா? இந்தத் தீவட்டித் தடியர்களின் முன்பு பெத்த தாயாரை அடித்துத் துரத்தினீர்களே! அந்தச் சண்டாளச் செய் கைக்கு இதுதான் தக்க பரிசு" என்று சற்றும் கலங்காது கூறினாள். இவளுடைய மனோ வைராக்கியமும், நீதியின் உயர்வும், உத்தம குணத்தின் லக்ஷியமும் அங்கிருந்தவர்களைப் பிரமிக்கச்செய்தன.

27

கர்ப்பிணியை அழைத்துச் செல்லும் முத்துச்சாமிக்கு மட்டும் அவனையறியாது ஏதோ ஒருவித சங்கடம் வயிற்றில் செய்வதைத் தடுக்கவே முடியவில்லை. எதனால் இப்படியிருக்கிறது என்று நினைத்து நினைத்துப் பார்த்தும் அதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. வீட்டில் தனியாய் விட்டுவந்த மனைவி மக்களுக்கு யாதொரு ஆபத்தும் நேராதிருக்க வேண்டுமே என்கிற பெரிய பயமும் பீதியும் மனத்தில் எழுந்து வதைத்துக்கொண்டே இருக்கிறது.

ஒரு காரியத்தை அது மகா கொடியது என்பதை யறிந்தும் அதைத் தைரியமாகத் துணிந்து செய்யப் புகுந்த பிறகும் அவனை யறியாது வேதனை செய்வதானது நெருப்பு எப்படியும் தன் சூட்டைக் காட்டிவிடுவதுபோல வஷியங் காட்டிவிட்டது. ஒரு பிரம்மாண்ட சத்திரத்தின் வாசலில் வண்டி வந்து நின்றது. முத்துச்சாமி எல்லோரையும் இறக்கி உள்ளே அழைத்துச் சென்று தன்னிடம் பணங்கொண்டு கொடுத்த மனிதனிடத்தில் இவர்களை ஒப்புவித்து விட்டு, "ஐயா! இவர்களைக் கொஞ்சம் அக்கரையுடன் கவனித்து ஸ்வாமிகளிடம் சொல்லி மந்திரம் ஜபித்து ரக்ஷை கட்டி நல்ல மருந்தும் கொடுக்கச் சொல்லுங்கள். ஐயோ பாவம்! இவர்களுக்குள்ள வருத்தம் கூறத் திறமில்லை. நான் தைரியஞ்சொல்லி யழைத்து வந்தேன். நான் போய்வருகிறேன்" என்று கூறிவிட்டு, அவர்களுக்கும் தைரியம் சொல்லித் தேற்றினன்.

தனக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகையை ரகஸியமாகப் பெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டான். அந்தக் கர்ப்பிணியின் தாயும் தகப்பனும், "ஸ்வாமிகள் எப்போது வருவார்! எப்போது கூப்பிடுவார்? எப்போது மந்திரிப்பார்? எப்போது மருந்து கொடுப்பார்?" என்று எதிர்பார்த்தபடி அலைந்துகொண்டிருந்தார்கள்.

சுமார் மூன்று மணி நேரம் கழித்து, "அம்மா! உங்களைச் சாமியார் கூப்பிடுகிறுர்கள்" என்று ஒருவன் வந்து அழைத்துக் கொண்டு போனன். தடபுடலாக பூஜை நடத்தும் சாமியார் உல

கத்தையே மறந்து பக்திஞான வைராக்கியத்தில் மூழ்கிக் கண்ணைத் திறக்காது உட்கார்ந்திருக்கிறார். இந்தக் கர்ப்பிணியை அங்கு கொண்டு உட்காரவைத்ததும் அவள் மீது ஏதோ கும்பஜலத்தைத் தெளித்து மந்திரம் சொல்லியபடியே விபூதியை வாரி இறைத்து வேப்பிலையால் தடவிப் பின்னர் ஸ்வாமிகள் அவளை உள்ளே கொண்டுபோகும்படி உத்தரவிட்டார்.

உடனே கர்ப்பிணியின் தாயார் பெரிதாகப் புலம்பிக் கொண்டே அந்த ஸ்வாமியாரின் காலில்விழுந்து வணங்கி "ஸ்வாமி களே! எங்க குழந்தைக்கு நீங்கதான் கெதி. நாங்க ஒங்களே தான் நம்பி இருக்கிறோம். எங்களுக்கு நீங்கதான் வயித்திலே பாலை வார்க்கவேண்டும்" என்று கெஞ்சினாள். கூடவிருந்தமனிதன் இவர்களை நோக்கி "அம்மணீ! இனி, இந்தப் பெண்ணைப்பற்றிக் கவலையே வேண்டாம். இவர்களுடைய பொறுப்பு முற்றும் ஸ்வாமி களைச் சேர்ந்தது. இந்தப் பெண் உங்கள் பெண்ணில்லை என்று நினைத்துக்கொள்ளுங்கள். இன்று ஸ்வாமிகளுக்கு மவுன விருதம்; நாளைதான் பேசுவார்கள். ஆகையால், நீங்கள் அதோ இருக்கும் தனி விடுதியில் இருங்கள். இன்று இரவு அர்த்த ஜாம பூஜையின் போது மந்திரிப்பார். அப்போது ஸ்வாமிகள் பூஜை செய்யும் கடவுளே ஆவேசமாக வந்து பதில் சொல்லுவார். கவலை வேண் டாம். அதன்படியே சுவாமியும் செய்வார்" என்று தேறுதல் கூறிச் சென்றான்.

* * * *

ப்ரஸவ வேதனையுண்டாகித் தவிக்கும் ஸாவித்திரியின் நிலைமை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டே வந்ததால் அவளால் சமாளிக்க முடியாது போய்விட்டது. தூங்கும் பெண்ணையும் பிள்ளையையும் எழுப்பி, சுப்பியை எப்படியாவது கையோடு அழைத்து வரும்படி அனுப்பினாள்.

சுப்பியின் மகளுக்கு ஜுரம் அதிகமாக வந்து விட்டதால், அவள் வர முடியாதென்று கூறிவிட்டாள். அதற்குமேல் என்ன செய்வதென்று தெரியாது சிறிதுநேரம் துடித்தாள். வேறு எந்த விதமான வியாதியாயினும் சிவனே என்று படுத்துக் கிடக்கலாம்.

பிறரின் தயவே வேண்டாம் என்று இறுமாப்பு கொண்டிருந்த ஸாவித்திரிக்கு இதே பாதி மனக் குழப்பம் அதிகரித்துவிட்டது.

எதிர் வீட்டு பாட்டியை அவள் கூப்பிட்டுக்கொண்டு வரச் சொன்னாள். ஒருநாளும் லக்ஷ்யமே செய்தறியாத மனுஷி இப்போது கூப்பிடுகிறாள் என்றதும் பாட்டிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. வருபவள் தான் மட்டும் வராது அடுத்த வீட்டு மீனுப்பாட்டியையும் உடன் அழைத்துக்கொண்டு வந்துசேர்ந்தாள்.

ஸாவித்திரியின் நிலைமையைக் கண்டதும் கிழவி பரிதாபத்துடன், "ஏண்டியம்மா முத்துச்சாமிகூட ஊரிலில்லைபோலிருக்கிறதே! தங்கம் எங்கே போனாள்? உனக்கு மாஸமாகி விட்டது தெரிந்துமா அந்தக் கிழவி போய்விட்டாள். முத்து எப்போது வருவான்?" என்று அடுக்கடுக்காய் கேட்டாள்.

ஸாவி:—(முனகிக்கொண்டே) எத்தனையோ சொல்லிப் பார்த்தேன் பாட்டீ! ஒரே பிடிவாதமாய் பெண் வீட்டுக்குப் போய் விட்டுத்தான் வருவேன் என்று கூறி மாமியார் போய்விட்டார். அவ்வளவு கண்டிப்பாய் மாமியார் சொல்லும்போது நான் என்ன செய்வேன்? அவர் ஏதோ அவசர காரியமாக வெளியூர் போயிருக்கிறார். இப்படி நேரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை பாட்டி!—என்று ஒரே போடு போட்டாள்.

ஆபத்தானசமயத்தில் எப்பேர்ப்பட்டசத்துருவாயினும் உதவிபுரிய வேண்டுவது மனித இயற்கையின் லக்ஷணமும் கடமையுமல்லவா? அம்முறையில் இரண்டு பாட்டிகளும் ஏகோபித்த மனத்துடன் உதவிபுரியலானார்கள். பின்னும் சில மணி நேரத்திற்கெல்லாம் குழந்தையின் அழுகுரல் அக்கம் பக்கமுள்ளவர்களை எல்லாம் எழுப்பி விளம்பரப்படுத்திவிட்டது.

"என்ன குழந்தை? பெண்ணா? பிள்ளையா?" என்ற கேள்வி ஒவ்வொருவரின் வாயிலும் கிளம்பிற்று. சற்று நேரத்திற் கெல்லாம் இன்னொரு குழந்தையின் அழுகுரலும் பயங்கரமாயும் விகாரமாயும் காதில் விழுந்ததைக்கேட்ட எல்லோரும் பிரமித்தார்கள். உள்ளிருக்கும் பாட்டிமார்கள் "ஐயோ! இதென்னடியம்மா! கலியுக விந்தையா யிருக்கிறதே. ஐயோ! பயங்கரம்! பயங்கரம்!!

இது குழந்தை இல்லை. குரங்கு மாதிரியாய் தேகம் முற்றும் மயிரும், வாலுமாக வன்றோ இருக்கிறது. என்ன அனியாயமடீ! ஸாவித்திரீ! அட கிரகசாரமே! இன்னொரு குழந்தைக்கு முகத்தில் மூக்கு, காது, கண் ஒன்றுமே இல்லையே!" என்று வாய்விட்டு உரக்கக் கூறிவிட்டார்கள்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்த ஸாவித்திரியின் மனம் எப்படித்தான் இருக்கும்? அசல் குரங்குபோல் கீச்சு கீச்சென்று கத்தும் குரங்குக் குழந்தையையும் முண்டம்போன்ற குழந்தையையும் ஒருமுறை அப்படி கண்ணால் பார்த்ததுதான் தாமதம். கிரீச்சென்று ஒரு கத்து கத்தினாள். அடுத்த நிமிடமே மூச்சுப் பேச்சற்றுச் சவம்போலாகிவிட்டாள். பாட்டிகளின் வாய் சும்மா இருக்கிறதா? "ஐயோ! ஸாவித்திரி! முற்பகல் செய்வது பிற்பகல் விளையும் என்ற பழமொழி பொய்யாகுமா! அப்போது பணத்தை வாங்கிப் பையில் கொட்டிக்கொண்டு மகாபாதகமாகிய காரியத்தைத் துணிந்து செய்யப் புகுந்த சமயம் சற்றுவது யோசனையோ பயமோ, தெய்வம் ஒன்று உண்டு என்றும் அதன் ஆக்ஞைக்கு என்றுவது உட்பட வேண்டுமென்ற எண்ணமும் ஒரு கடுகளவாவது இருந்ததா? 'கலிகாலத்துத் தெய்வம் கண்மூடியல்ல' என்பது இனியாவது தெரிந்துகொள்ளுங்கள்.

கடவுள் மக்களுக்கு உயர்தரமான ஆறறிவு கொடுத்துப் பிறப்பிக்கிறான். புத்தியையும் அதைப் பயன்படுத்தும் மார்க்கத்தையுங் கொடுக்கிறான். சரியான ராஜபாட்டையைப் போன்ற வழியில் செல்லாது, கரடுமுரடான காட்டில் சென்று துஷ்ட மிருகங்களிடம் தாமாக மாட்டிக் கொள்வது போலும், முத்துப் போன்ற தெளிந்த நீரோடையை விட்டுவிட்டுக் கானல் நீரை நம்பி அதன்பின்னே ஓடுவதுபோன்றுமான செய்கைக்கு இதுதான் தக்க ப்ராயச்சித்தம். உன்னுடைய கடின சித்தத்துடன் ஒரு கர்ப்பிணிக்குக் கேடு நினைத்ததன் ப்ரதிபிம்பம் இது. உங்கள் செய்கை உலகிற்கு ஓர் பாடமாகட்டும்" என்று கிழவிகள் மாறி மாறிப் பெரிய ப்ரஸங்கம் செய்ய வாரம்பித்துவிட்டார்கள்.

ஸாவித்திரிக்கு, சப்தநாடியும் அடங்கி மூர்ச்சையாகிவிட்டது போன்ற நிலைமையிலும் எங்கோ ஒவ்வொரு நிமிடம் சற்று

ப்ரக்ஞை உண்டாகும்போது அவள் காதுகளில், "தீமை செய்யா திரு மனமே!"

என்ற பாடல்கள் தேவகானம்போல் ஒலித்ததும் அவளை யறியாது சித்திரவதை செய்துவிட்டது. அதே நிமிடம் இவ் விரு குழந்தைகளின் அவலக்ஷணமான அழுகுரலும் அவள் மூளையைக் கலக்கி, முழு பயித்தியமாகச் சிதறவடித்துவிட்டது. மீண்டும் ஒரு கூச்சலிட்டாள். அவ்வளவுதான். மூர்ச்சையானாள். என்னதான் கொடுமை செய்தவளாக விருப்பினும் கிழவிகளுக்கு என்னசெய்வ தென்று தோன்றவில்லை. திகைத்து ப்ரமித்து நடுங்கிவிட்டார்கள்.

## 28

"பாட்டி! உங்களுக்கோர் அதிசயமான வஸ்து இன்று காட் டப்போகிறேனே!" என்று கூறியபடியே பத்திரிகை யிலுள்ள ஒரு விளம்பரத்தைப் படிக்க வாரம்பித்தாள் ஸௌம்யா. தங்கம்மாள் ஆவலே வடிவமாக அதைக் கவனிக்கலானாள்.

### இனாம்! ஆயிரம் ரூபாய் இனாம்!!

சிற்றேரி என்கிற கிராம வாஸியும், உயர்ந்த குடும் பத்துப் பெரிய மனுஷியும் நன்றாகப் படித்து சத்விஷயங் களில் அபார ஞானமும் பாண்டித்யமும் பெற்ற சுமார் 55 வயது மதிக்கக் கூடிய விதவையம்மாளைத் திடீ ரென்று காணவில்லை. அவர்களுடைய புகைப்படத்தை இதில் பிரசுரித்திருக்கிறது. அந்தம்மாளின் பெயர் ஸ்ரீமதி தங்கம்மாள். அவர்கள் வயது முதிர்ந்த காலத்தில் எங்காவது வழி தப்பி அலைகிறார்களோ என்ற எண்ண மிருப்பதால் அவர்களைக் கண்டுபிடித்துக்கொடுக்கும் நபருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதாய் வஸந்தபுரி ஜமீன்தாரிணியாகிய ஸ்ரீமதி லீலாவதி நம்மாழ்வார் அவர்கள் அறிவிக்கிறார்கள்."

அதைப் படித்ததும் ஸௌம்யாபாய் புகைப்படத்தைக் கிழ விக்குக் காட்டி, "பாட்டி! அப்போ பரிசுத் தொகை ஆயிரம் ரூபாயும் எனக்குத்தானே!" என்று கூறி, கிழவியைத் தழுவிக் கொண்டு கடகடவென்று நகைத்தாள்.

தங்கம்மாளுக்கோ தூக்கி வாரிப்போட்டது. தன் புகைப் படம் பத்திரிகையிலும் வரவேண்டுமா! என்ற அதிர்ச்சி பொரு

புறம். "என் கண்ணனைக் கண்மணி லீலாவா மனந்தேறி மிஸஸ் நம்மாழ்வார் என்று பெயர் வைத்துக்கொண்டு துணிந்து எழுதி விட்டாள். ஆஹா! என்ன பொறுமை! என்ன மனோவலிமை!" என்று தனக்குள் தான் வியந்தாள்.

கிழவியின் தியக்கத்தையும் கண்ணீர் முட்டுவதையுங் கண்ட ஸௌம்யாபாய் "பாட்டீ! ஏன் நீ வருத்தப்படுகிறாய்! இனிமேல் நீ என்னிடம் ஒளிக்க முடியாதல்லவா! இந்தப் படத்தில் உள்ள கிழவி நானல்லவென்று மறுக்க நினைக்கிறாயா! அது இனிமேல் உங்க முப்பாட்டன் வந்தாலும் முடியாது. பாட்டீ! உன்னைக் கொண்டுபோய் அந்த ஜெமீந்தாரிணியம்மாளிடம் காட்டிவிட்டு ஆயிரம் ரூபாயை வாங்கி பையில் போட்டுக்கொண்டு மறுபடியும் ஜமீந்தாரிணியம்மாளை கெஞ்சிக்கேட்டு உன்னை அழைத்துக் கொண்டு வந்துவிடப் போகிறேன். தெரியுமா! என்ன சரிதானே!" என்றாள்.

கிழவி இதற்கு என்னதான் பதில் சொல்வாள் பாவம்! லீலா வின் அன்பை எண்ணி உள்ளம் பூரித்தாள். ஏற்கெனவே அவளைப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஆசை தலை தூக்கி நின்றது. பரிதாப மும் ஏக்கமும் நிறைந்த பாவத்துடன் ஸௌம்யாபாயை நோக்கி, "குழந்தாய்! ஸௌம்யா!" என்று கூப்பிட்டாள். ஆனால், அதற்கு மேல் பேசமுடியவில்லை. கண்ணீர் ஆறாய்ப் பெருகிவிட்டது.

கிழவியின் நிலையை அறிந்த ஸௌம்யாபாய், "பாட்டீ! ஏன் இப்படி கண்கலங்குகிறாய்! அந்த ஜமீந்தாரிணி உனக்கு என்ன ஆகவேண்டும்? நீ ஏன் வருத்தப்படுகிறாய்? ஏதோ மர்மமிருப்பதாக முன்பு ஒருதரம் தெரிவித்தாயே! அதை இப்போது சொல்லமாட் டாயா?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

கிழவி:—ஸௌம்யாபாய்! என்னை உண்மையானப் பிரீதி யுடன் ஆதரிக்கும் மனிதர் இரண்டே பேர்கள்தான் என்று சொன் னேனே! அதில் அந்த பெண்ணும் ஒருத்தியாவாள். குழந்தாய்! நீ இப்போது என்ன செய்யப்போவதாகத் தீர்மானித்திருக்கிறாய்?

ஸௌம்யா:—பாட்டீ! நீ எப்படிச் சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன். உன் யோசனையைத்தான் தெரிவியேன்.

கிழவி:—அம்மா! ஸௌம்யாபாய்! நான் சொல்வது இருக் கட்டும். உன் தீர்மானத்தை முதலில் தெரிவி. பிறகு நான் சொல் கிறேன்.

ஸௌம்யா:—பாட்டீ! எத்தனையோ ஆவலுடன் அந்தம்மாள் உன்னைக் காணக் காத்திருப்பது இந்த விளம்பரத்திலிருந்து தெரிய வருகிறது. எனக்கு என்னவோ ஒத்தை பைசாவேண்டாம். ஆனால், ஜெமீந்தார்களின் சொத்துக்கள் எத்தனையோ பேர்களுடையது

கணக்கற்ற அக்கிரம வழிகளில் செலவழிந்து ஜெமீனே பாழாய்ப் போவதை நாம் அடிக்கடி பத்திரிகையில் பார்க்கிறோம். நான் ஏற்கெனவே உன்னிடம் தெரிவித்துள்ளபடி வஸுந்தராதேவியின் அனாதை நிலயத்திற்கு இந்த 1000 ரூபாயைக் கொடுத்துவிடலாம் என்று நினைக்கிறேன். இது ஒரு நல்ல தர்ம காரியமில்லையா பாட்டீ! உனக்கென்ன தோன்றுகிறது?

கிழவி:—அம்மா! மகா புத்திசாலித்தனம் நிறைந்த உன் யோசனைக்குப் பதில் யோசனைக்கூட உண்டா! கட்டாயம் அப்படியே செய்துவிடு. நீ ஜமீந்தாரிணியம்மாளுக்கே நேரில் கடிதம் எழுதிவிடு. பத்திரிகையில் மட்டும் விளம்பரப்படுத்தாதே" என்றாள்.

கிழவி அம்மாதிரி கூறியதற்குக் காரணம், தன்னிடம் இத்தகைய பிரேமையுடன் இருக்கும் இவளுக்கு தக்க வழியில் உபகாரம் செய்யவும் லீலாவைக்கொண்டே இந்த அருமையான குணமணியை கோபிக்கு விவாகம் செய்து வைக்கவும் மனத்தில் எண்ணினாள். இந்த ஆழமான இதயத்தின் போக்கை அந்தப் பேதைப் பெண் ஸௌம்யா எவ்வாறு அறியக்கூடும்? அதோடு, தான் வெகு நாட்களாக மனத்திற்குள் பதுக்கிவைத்திருக்கும் காதல் கள்ளனாகிய கோபிநாத்தின் பாட்டியார்தான் இந்த கிழவி என்பதுதான் எப்படித் தெரியும்? உலகானுபவம் மூட்டை மூட்டையாய் பெற்ற கிழவியாயினும் ஸௌம்யாவின் அந்தரங்கத்தில் அழுந்திக் கிடக்கும் அந்த காதல் விஷயந்தான் எப்படித் தெரிய முடியும்?

ஒருவருடைய விஷயம் ஒருவருக்குத் தெரியாமலேயே வயிற்றில் பிறந்த மக்களைவிட அதிக பாசத்துடனும், பெத்த தாயாரை விடப் பன்மடங்கு அபாரமான அன்புடனும் இருவரும் பழகி வருவது கலிகால விந்தையினும் விந்தையல்லவா!

ஆனால் கிழவிமட்டும் அவ்வப்போது ஸௌம்யாவிடம் விவாக விஷயத்தைப்பற்றிப் பேசி அவள் அபிப்பிராயத்தை அறிய ஆவல் கொள்வாள். ஸௌம்யா அத்தனை எளிதில் தன் மனத்தை விட்டுக் கொடுத்துவிடுவாளா! "நான் கன்னியாகவே காலத்தைக் கடத்தப்போகிறேன். விவாகமே எனக்கு வேம்புபோல் இருக்கிறது. விவாகமில்லாது ஒரு பெண் இருக்கமுடியாதா என்ன?" என்றது போன்ற வீண் வாதங்களை ஒருபோதும் ஸௌம்யா கூறியதே இல்லை.

வேளை வரும்போது விவாகம் நடக்கும் பாட்டீ! அதற்குக் கடவுளின் கருணை நிறைந்த காலம் வரவேண்டாமா! திக்கற்ற அனாதையாயிருந்த எனக்கு முதலில் உன்னைத் துணையாய் அனுப்பிய கடவுள் இனி கல்யாணத்திற்கும் வழி செய்யாமலா போவார்', என்று வெகு பெருந்தன்மையாயும், கண்ணியமாயும் கூறுவாள்

இதிலிருந்து கிழவி என்ன தெரிந்துகொள்ளமுடியும்! கல்யாணத்தை விரும்புகிறுள் என்றுமட்டும் நினைத்துக்கொண்டாள். ஸௌம்யாவின் குணத்தழகையும், கல்வி அறிவையும், ஒழுக்கத்தையும் காணக் காண கிழவியின் மனம் அந்த பெண்ணிடத்தில் ஐக்கியமாகிவிட்டது; அவளை விட்டிருக்க முடியாதவளானுள்.

அன்றே ஸௌம்யாபாய் லீலாவதிக்கு ஒரு கடிதம் எழுதிவிட்டு, பதிலை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

## 29

லீலாவின் தைரியத்திற்கும், நியாய புத்திக்கும், தியாக சித்தத்திற்கும் யார்தான் வியக்கமாட்டார்கள்? இத்தகைய நாட்டுப் பெண்ணைத் தாம் அடைந்து களிக்கும்படியாகக் கடவுள் கிருபை செய்ததை எண்ணிப் பூரித்த அவ்விருவரும் லீலாவைச் சேர்த்து அணைத்துக்கொண்டார்கள்.

இன்ஷ்யூரன்ஸ் பணத்தைக் கபளீகரம் செய்து ஸ்வாஹா பண்ணி விட்டதற்காக கம்பெனியார் பிடி வாரண்டு கொடுத்து விட்டதால் இவனைக் கைதியாக்கவந்த போலீஸாருக்கு ரத்தினம் ஜமீந்தாரிணியின் தகப்பனுர் என்றது அந்த வீட்டிற்கு வந்த பிறகுதான் தெரிந்தது. உடனே அவர்களுக்கு சற்று யோசனையுண்டாகிவிட்டது. ஜெமீந்தாரிணியம்மாளின் தகப்பனுயிற்றே என்ற யோசனையால் உடனே விலங்கை மாட்டாது தியங்கிய படியே லீலாவின் முகத்தையும் நம்மாழ்வாரின் முகத்தையும் பார்த்தார்கள்.

அவர்கள் பார்ப்பதை யறிந்த லீலாவதி கம்பீரமான தோற்றத்துடன் இன்ஸ்பெக்டரை நோக்கி, "சார்! இப்போது என் முகத்தையோ, என் கணவனின் முகத்தையோ பார்க்கவேண்டியது உங்கள் கடமை இல்லை. உங்கள் கடமை குற்றம் செய்தவரைக் கைதியாக்கவேண்டியதே யன்றி, ஜமீந்தாராயிற்றே என்று தயங்க வேண்டாம். ஜெமீனுக்கும் குற்றம் செய்தவர்களுக்கும் யாதொரு சம்பந்தமோ, தயாதாக்ஷண்யமோ தேவை இல்லை.

என் தகப்பனுராயிற்றே என்று நான் அநியாயத்தை ஆதரிக்க முன்வரமாட்டேன். என் தகப்பனுர் செய்துள்ள அக்கிரமங்கள் ஒன்றிரண்டல்ல. அவைகள் அனைத்தையும் நான் அறிவேன். உண்மையில் குற்றம் செய்யாத நிரபராதியாய் இருந்து இத்தகைய பழி வந்து சாருமாயின் என் உயிரையுங் கொடுத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டிருப்பேன்.

இவர் செய்துள்ள அக்கிரமங்கள், படுமோசங்கள், குடி கெடுக்கும் கோராமைகள் ஆகிய முற்றும் என் கண்ணால் கண்டிருக்கும்போது நான் இவரைப் பிடித்துத் தருவதுதான் தருமமேயன்றி மறைப்பது பாதகத்திலும் பாதகம். அதோ! அதோ வீற்றிருக்கும் கபோதி இந்த மகா பாவியினால்தான் இந்த கபோதி நிலைமையை அடைந்தார்.

ஐயா! இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை இவர் மோசம் செய்து அந்தப் பணத்தை வைத்து, என் தாயும் உடந்தையாய் இருந்து குதிரைப்பந்தயம், சூதாட்டம், குடி முதலியவற்றிற்கு—இப்போது ஓடிவிட்ட மகாபாவிகளின் கூட்டாளியுடன்—செலவிட்ட ரகஸியம் எனக்குத் தெரியும். என்றைக்காவது இம்மாதிரி கதி வரும் என்று நான் எதிர்பார்த்ததுதான். இது எனக்குப் புதிதல்ல.

ஆனால், என்னை ஜமீந்தாருக்குக் கொடுத்துக் கல்யாணம் செய்துவிட்டால் அந்த ஜெமீன் பணத்தினால் இவர் தப்பித்துக் கொள்ள கோட்டை கட்டியதுதான் ஏமாற்றமாகிவிட்டது. ஆகையால், இவரைத் தாராளமாகப் பிடித்துச்செல்லலாம். இவரை நம்பிப் பணங் கொடுத்து வயிறெரிந்த குடும்பத்தினருக்குமட்டும், இந்த மகானுபாவரின் வயிற்றில் பிறந்ததற்காக நான் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். உம். நடத்திச் செல்லுங்கள்" என்று ஓர் ரஜபுத்திர வீரப் பெண்மணியைப்போல் உத்திரவிட்டாள்.

ரத்தினத்தின் முகம் சிவந்துவிட்டது. லீலாவை ஒரே குத்து குத்திவிடலாமா என்று ஆத்திரத்துடன் பார்த்தான். அதற்கு இனி அவகாசம் ஏது? போலீஸார் அவனை அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

லீலாவின் தியாக புத்தியைக் கண்டு நம்மாழ்வார் வியந்துபோய் அவளை ஆவலுடன் தடவிக்கொடுத்தான். "அம்மா! என்னைப்போல் அபாக்கியவானும் இவ்வுலகில் உண்டா என்று என் புத்தி தெளிந்த சமயத்தில் எல்லாம் நினைத்து வருந்தி இருக்கிறேன். இப்போது அதே மனது என்னைப்போல் அதிர்ஷ்டம் செய்த பாக்கியவான் உலகில் உண்டா என்று ஆனந்தக் கூத்தாடுகிறது. என் தாயார் செய்த புண்ணியமும் உங்களுடைய ஆசீர்வாதமும்தான் இந்த விலையிலா மாணிக்கம் எனக்குக் கிடைத்தது" என்று வியந்து இன்பத்தின் மிகுதியால் கண்ணீர் முட்டிவிட்டது.

அவ்விருவரும் லீலாவை ஒருத்தியும் நம்மாழ்வாரை ஒருத்தியுமாகக் கட்டித்தழுவிக்கொண்டு "லீலாவதீ! இதென்ன ஆச்சரியம்! எங்கள் கண்களையே எங்களால் நம்ப முடியவில்லையே! நாங்கள் முன்பு பார்த்த நம்மாழ்வாரா இவன்! இந்த மாறுதலுடைய

ரகஸியமென்ன சொல்லு" என்று ஆவலே வடிவமாய்க் கேட்டார்கள்.

லீலா :—அம்மா ! எல்லாம் கடவுளின் கிருபை. பெரியாரின் ஆசீர்வாதம். என் பாட்டியின் அனுக்கிரகம். அதோ வரும் என் அத்தானின் உத்தமகுண விசேஷத்தின் பயன். அத்தான் ! நீ செய்த காரியங்களை எல்லாம் நீயே சொல்லேன் பார்க்கலாம்— என்று கோபியை நோக்கிக் கூறினாள்.

நம்மாழ்வார் கோபியை அப்படியே இறுகக் கட்டித் தழுவிக் கொண்டு, "கோபீ ! எனக்கு மறுபிறப்பு கொடுத்தப் பெருமை உன்னையன்றி வேறு யாருக்குள்ளது ? நானும் ஒரு கண்ணியமான மனுஷ்யன் என்பதை உணரச்செய்த மகத்துவத்தை நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்கமாட்டேன்"—

என்று மேலும் மேலும் புகழ்ந்துகொண்டே போவதை இடைமறுத்து கோபி பேசத்தொடங்கி, "சார் ! இதென்ன ஸ்தோத்திர பாடம். ஏதோ மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமையைத்தானே நான் செய்தேன். இதற்காக ஏதோ பிரமாதப்படுத்திப் பேசுகிறீர்களே ! குழந்தை முதல் என்னருமை லீலாவை நான் கூடப்பிறந்த சகோதரியைக் காட்டிலும் ஆயிரம்மடங்கு அதிகமாக நேசிக்கிறேன். அந்த உத்தமச் சகோதரிக்காக நான் என்னுயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

அம்மணீ ! நான் தற்செயலாக லீலாவின் கல்யாண விஷயத்தை அவள் மூலமாகவே கேள்விப்பட்டதும் என்னை முதலில் கலக்கிவிட்டது. பிறகு கடவுள் என் மனத்தில் பளிச்சென்ற ஓர் தெம்பையும் சக்தியையும் கொடுத்தார். அதாவது நம்மாழ்வாரின் தாயாருடைய ரகஸியத்தை நான் தெய்வச் செயலாய் அறிய நேர்ந்தது.

அது எப்படியெனில் எங்கள் குடும்பத்தின் துரதிருஷ்ட விதியால் என் பிதாவின்மீது ஒரு குற்றம் ஏற்பட்டு அவர் ஜெயிலிலிருக்கிறார். அவருடன் கூடவிருக்கும் ஒருகைதி, தான் திமிர்படைத்துச் செய்துவிட்ட குற்றங்களுக்காகப் பலகாலும் வருந்தி கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதுபோல் கடவுளை மன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் விடுவாராம்.

தான் கண்மூடித்தனமான ஆத்திரத்தில் இளைய ஜெமீந்தாருக்கு புத்திமாறுட்ட மருந்தைக் கொடுத்துக் குடியையே பாழ் செய்த ரகஸியத்தையும் என் பிதாவிடம் சொல்லி யழுதாராம். என் பிதாவை நான் ஒரு சமயம் பார்க்கச் சென்றிருந்தபோது அவர் என்னிடம் அவைகளைப்பற்றிக் கூறினார்.

அதை நான் ஞாபகத்தில் வைத்திருந்தேன். இந்த கல்யாணம் ஏற்பாடாகியிருப்பதை யறிந்ததும் நான் அந்த மனிதரையும் என் தகப்பனாரையும் சேர்ந்தாற்போல் பார்ப்பதற்கான ஏற்பாட்டை ஒரு ஜெயில் விஸிட்டர் மூலம் செய்துகொண்டு கூடப்போய் அவர்களைக் கண்டு பேசினேன்.

"இந்த மாதிரி குடும்பத்தைப் பாழ்செய்தது போதும். நீர் செய்த தீமைக்கு மாற்று ஏதாவதிருப்பின் அதைத் தெரிவித்து அக் குடும்பத்தின் விளக்கை ஏற்றிவைத்தால் உமது குற்றத்தைக் கடவுள் மன்னிப்பார்" என்று நான் பின்னும் ஏதேதோ கேட்டேன்.

அவருடைய ஆசைமிகுந்த பெண்ணுக்கு திடீரென்று மூளைக் கோளாறு உண்டாகி இறந்துவிட்ட துக்கமே அவருடைய மனத்தை மாற்றிவிட்டதாயும் தான் செய்த பாபத்திற்குத்தானே பரிகாரம் செய்வதாயும் ஒப்புக்கொண்டு, ஒரு மூலிகையின் பெயரைக் கூறி "இதை தினம் பொழுது விடிவதற்குள் அறைத்துப் பாலில் கரைத்து அரை மண்டலம் குடிக்கக் கொடுத்துவிட்டு குத்தாலம் அருவியில் ஸ்நானம் செய்வித்து குத்தாலீச்வரன் கோயிலில் சேவை செய்தால் அந்தக் கோளாறு நீங்கிவிடும்" என்று கூறினர்.

உடனே நான் இந்த ரகஸியத்தை லீலாவிடம் தெரிவித்தேன். விவாகமாவதற்குமுன்பு இம்மாதிரி செய்து தெளிவு பெற்றுவிட்டால் ஒரு வேளை ஏழைப் பெண் என்று விவாகஞ்செய்துகொள்ளாது தள்ளிவிட்டாலும் விடுவாரோ என்கிற யோசனையினுல் விவாகத்தை முதலில் நடத்திவிட்டோம்.

லீலாவின் அதிர்ஷ்டம் சரியாயிருந்தால் குணமாகிவிடுகிறது; இல்லையேல், விதிப்படி நடக்கட்டும்" என்று இருவருமாகத் துணிந்துதான் இதில் இறங்கினேம். கல்யாணமாகிய மறு வாரமே நான் அவரை ரகசியமாகக் குற்றாலத்திற்கு அழைத்துச் சென்று அந்த வைத்தியன் சொல்லியது போலவே செய்தேன்.

அந்தக் குற்றாலநாதனின் கிருபையால் உடனே குணம் தெரிய வாரம்பித்தது. வஸந்த மண்டபத்தில் தம்பதிகள் உல்லாஸமாயிருப்பதாகவே பாவனை காட்டி லீலா நடந்துகொண்டு, இடையிடையே அவளும் அங்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்துவந்தாள்.

முற்றிலும் குணமாகிய பிறகே இங்கு அழைத்துவந்தோம். அவருடைய பெற்றோர் தெய்வமாயிருந்து ஆசீர்வதித்தார்கள். கடவுளின் அநுக்ரகமும் இருந்தது; சரியாகிவிட்டது. ஜமீன் விவகாரங்கள் முற்றிலும் குமாஸ்தாவிடமும், லீலாவிடமும் ஒப்படைத்துவிட்டார். பேராசைப்பிடித்த பெற்றோருக்கு லீலா

பாடமும் கற்பித்துவிட்டாள். இதுதான் நடந்த விஷயம்" என்று மள மளவென்று கூறிமுடித்தான்.

இதைக் கேட்டதும் அவ்விருவரும் கூறத் திறமற்ற சந்தோஷத்தை யடைந்து பூரித்தார்கள். கோபிக்குப் பல வாழ்த்து மொழிகளை மலர்போல் தூவினார்கள். ஜமீந்தாரிணியம்மாளின் குணத்தின் அழகைப்பற்றிக் கொண்டாடாத மக்களில்லை. கோபிதான் நம் மாழ்வாரின் முக்கிய காரியதரிசியாகிவிட்டான். அத் தம்பதிகளின் வேண்டுகோளின்படி கோபி, தன் சகோதரிகளையும் தாயாரையும் இங்கேயே அழைத்துவந்து விட்டான்.

சில தினங்கள் சென்றன. லீலாவதிக்கு ஓர் கடிதம் வந்தது. பிரதமகாரியதரிசியாகிய கோபியே சகல தபால்களையும் கவனிப்பது வழக்கம். அந்தக் கடிதத்தின் கையெழுத்தைப் பார்த்ததும் கோபி ஆச்சரியமும் ப்ரமிப்புமடைந்து "என்ன! ஸௌம்யாபாயின் கையெழுத்துப்போலிருக்கிறதே! அவள் என்ன எழுதியிருக்கக்கூடும்? லீலாவுக்கு அவளை எப்படித் தெரியும்?" என்று தனக்குள் யோசனை செய்தபடியே 'லீலாவுக்கு வந்த கடிதத்தை நாம் பிரித்துப் பார்ப்பது பிசகு' என்று முடிவு செய்துகொண்டு லீலாவிடம் வழக்கப்படி கடிதங்களைக் கொடுத்தான்.

லீலா கடிதங்களை யெல்லாம் படித்துக்கொண்டே வருகையில், ஸௌம்யாபாயின் கடிதத்தைப் படித்ததும் தன்னை மறந்த ஆனந்தத்தினால், "அத்தான்! அத்தான்! இதோ பாரு; இக்கடிதத்தைப் படித்துப்பாரு. பாட்டி கிடைத்துவிட்டாள்! என்னுடைய நிதி கிடைத்துவிட்டது" என்று சிறு குழந்தையைப்போல் குதித்தாள், கோபி ஆவலே வடிவாய்க் காத்திருந்ததால் "எங்கே! எங்கே? லீலா! பாட்டி கிடைத்துவிட்டாளா!" என்று கடிதத்தை உடனே வாங்கிப்படிக்க வாரம்பித்தான்.

"மாதுசிரோமணியாகிய ஸ்ரீமதி லீலாவதி தேவிக்கு ஏழைச் சிறுமி ஸௌம்யாபாய் அனேக வந்தனங்கள் செய்து தெரிவிக்கும் விக்ஞாபனம். உபய க்ஷேமங்கள்.

அம்மணீ! 30-ந் தேதி "ஜனநேசன்" பத்திரிகையில் தாங்கள் செய்திருந்த விளம்பரத்தைக் கண்ணுற்றேன். தாங்கள் காணாமற்போன தங்கம்மாளிடத்தில் எத்தனை அன்பும், கட்டுமீறிய ப்ரேமையும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அந்த விளம்பரத்தைப் பார்த்ததும், நான் திக்கற்ற பரதேசியாகையால் அவ்வுணர்ச்சியின் உச்சத்தை என் இதயம் அறிந்தது. தாங்கள் தெரிவித்துள்ள பெரியம்மாள் ரயிலடியில் அகப்பட்டுக்கொண்டு

இறக்கும் விபத்திலிருக்கையில் கடவுள் செயலால் அதே ரயிலில் நான் செல்லவும், அந்த அருமையான உயிரைக் காக்கவும் முடிந்தது.

என்னுடைய புண்ணியவசத்தினால் தற்சமயம் அந்த அம்மாள் மகா ஏழையாகிய என் குடிசையில் சௌக்கியமாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய வரலாற்றை நான் இன்னமும் அறியவில்லையெனினும் அவர்களிடம் எனக்குள்ள எல்லையிலா அன்பை என்னால் தடுக்க முடியவில்லை. உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன பாந்தவ்யம் என்று இன்னும் எனக்குத் தெரியாது.

உங்கள் விளம்பரத்தில் கண்டுள்ள ரூபாய்க்கு நான் சற்றும் ஆசைப்படவில்லை. பகவான் எனக்குக் கொடுத்துள்ள கால்வயிறு கஞ்சியே எனக்குப் பரம திருப்தியை அளித்திருக்கிறது. எனினும், தாங்கள் தெரிவித்துள்ள தொகையைத் தங்கள் பெயரால் "வஸுந்தரா தேவியின் அனாதை நிலையத்திற்கு நன்கொடையாக உதவி செய்யலாம் என்று நான் தீர்மானித்தேன். பெரியம்மாளும் அதை ஆமோதித்தார்கள்.

அம்மணீ! கடவுளாக எனக்குக் காட்டிய அந்தப் பெரியம்மாளின் துணையை நான் இழக்க நேர்ந்தது பற்றி மிகவும் விசனப்படுகிறேன். அந்தம்மாளை அனுப்ப மனமில்லாததால் உங்களுக்குத் தெரிவிக்காமலிருந்து விடலாமா என்றும் நினைத்தேன். ஆனால், அத்தகைய அநியாயத்திற்கு என் மனம் இடந்தரவில்லை. வலுவில் கிடைத்த பாட்டியைப்பிரிய எனக்கு மனம்வராதிருக்கையில் இத்தனை அன்பாகத் தாங்கள் எதிர்பார்க்கும்போது தங்கள் மனம் எப்படி இருக்கும் என்பதை நினைத்து நான் ஒப்புக்கொண்டேன்.

அம்மணீ! தயவு செய்து தாங்களே நேரில் வந்து அந்த அம்மாளை அழைத்துச்செல்லவேண்டுமென்று நான் பிரத்யேகமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குற்றங் குறைகள் இருப்பின் மன்னிக்கவும்.

இங்ஙனம் :
தங்கள் அன்புள்ள
ஸௌம்யாபாய்."

என்று எழுதியிருந்த கடிதத்தைப் படித்தவுடனே கோபியின் மனத்தில் பொங்கி எழுந்த ஆனந்த உணர்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. அவனுடைய மனத்திற்குள் புதைந்து கிடக்கும் அந்தரங்க

ரகஸ்யத்தை லீலா எங்ஙனமறியக் கூடும்? பாட்டி கிடைத்துவிட்ட சந்தோஷத்திற்காகத்தான் கோபி இத்தனை பூரிப்பு பூரித்துவிட்டான் என்று அவள் எண்ணினாள்.

"கோபி! கையெழுத்து என்ன அழகாயிருக்கிறது பார்த்தாயா? இன்று தூங்கி எழுந்திருக்கும்போதே என் மனத்தில் ஏதோ ஆனந்தம் பொங்கியது. அதன் பலன் இதுதான்போலும்! அந்த உத்தமி யாரோ? நம் பாட்டியை ஆதரித்த புண்ணியமும் பெருமையும் அவளை என்றும் காக்கும். கோபி! என்ன யோசனை செய்கிறாய்?" என்றாள்.

கோபி :—ஒன்றுமில்லை லீலா! கடவுளின் திருவிளையாடலின் ரகஸ்யத்தை யாரால் அறியக்கூடும் என்றதை நினைக்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது.

லீலா :—கோபி! இன்றே நாம் புறப்படுவதற்கு ஆயத்தம் செய். என் கோபி! நீ உன் தங்கைகளையும் தாயாரையும் வஸுந்தரா தேவியின் ஆச்ரமத்தில்தான் விட்டிருந்ததாகச் சொன்னாயே! அதே ஆச்ரமத்திற்குத்தானே இப்போது இந்தம்மாளும் பணங் கேட்கிறார்கள். உன் தங்கைகளையும் தாயாரையும் ஆதரித்த இடத்திற்குப் பணத்தைக் கொடுப்பது பின்னும் சந்தோஷமாகிவிட்டது. ரூபாயைச் சித்தம் செய்துகொண்டு கிளம்பு.

கோபி :—லீலா! நீ கோபிக்காதே. இதற்கு மட்டும் நீயே போய்விட்டு வருவது மேலென்று நினைக்கிறேன். நான் வரவில்லை.

லீலா :—என்ன! என்ன! நீ வராது நான்மட்டும் போவதா? ஊஹூம் அது முடியாது. நம் பாட்டிக்காக நாம் இருவருந்தான் போகவேண்டும். ஏன் நீ வரமாட்டேனென்கிறாய்? இந்தம்மாளைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

கோபி:—லீலா! கடவுளின் மாயைச்செய்கையின் அற்புதத்தை என்னென்பது? சொல்லவும் வெட்கமாயிருக்கிறது. சொல்லாவிடினும் நீ கோபிப்பாய். என்ன செய்வதென்று தெரியவில்லை.

லீலா :—கோபி! இந்தப் பூர்வபீடிகையெல்லாம் இனி வேண்டாம். விஷயத்தை நானறிந்தே தீருவேன். நீ காலேஜில் படிக்கும்போது உன்னோடு ஒரு பெண் படிப்பதாயும் அவள் மகா புத்திசாலி என்றும் முன்பு ஒருதரம் சொல்லி இருக்கிறாயே! ஒருகால் அந்தப் பெண்தான் இவளாக இருக்குமோ என்று இப்போது உன் தயக்கத்திலிருந்து நான் சந்தேகிக்கிறேன். கோபி! கோபி! உண்மையைச் சொல்லிவிடு...

கோபி :—லீலா! இனிமேல் நான் எவ்விதம் ஒளிக்கமுடியும்? நீ யூகிக்கும் அதே பெண்தான் இந்தக் கடிதத்தை எழுதியவளும்,

நம்முடைய பாட்டியை ஆதரித்து வருபவளுமாவள். அதனால்தான் நான் வர மறுக்கிறேன்.

லீலா :—பேஷ்! கோபீ! இதை நான் ஒருநாளும் ஒப்புக் கொள்ளவேமாட்டேன். நீ முன்பு என்னிடம் சொல்லியபோதே நான் சந்தேகித்தேன். ஆனால், அப்போது நான் மிகவும் சிறியவ ளாக விருந்ததால் அதைப்பற்றிப் பேசாதிருந்துவிட்டேன். என் அவளைப் பார்க்கமாட்டேன் என்கிறாய்? அவளுக்கும் உனக்கும் உள்ள ரகஸ்யம் என்ன? அதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்... கோபீ! என்னிடங்கூட உனக்கு வித்யாஸமா?

கோபி :—லீலா! நீயா இப்படிக் கேட்பது? உன்னிடமே வித்யாஸமென்று நினைத்தால் நான் வேறு யாரிடம் தாராளமாகப் பேச முடியும்? அவ்வாறு ஒன்றுமே இல்லை. அந்தப் பெண் மகா புத்திசாலி. நற்குணவதி. அழகிலும் உனக்கு நிகரானவள். அவள் எனக்கு எட்டாக்கனி என்பதை உணர்ந்தும் மனம் கட்டுமீறி அவளையே தாவியது. அவளுக்கு அதே எண்ணம் பரிபூர்ணமாக இருப்பதையும் நான் அறிந்தேன்.

அதன்பிறகு இதன் முடிவு எவ்விதமாகுமோ என்ற பயம் என்னைப் பிடித்துக்கொண்டது. அவளைப்பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது. இந்நிலைமையில் என் தகப்பனாரின் கதி இம் மாதிரியாகிவிட்டதை அறிந்தபிறகு என் மனமே என்னைக் குத்திக் காட்டியது. 'ஜெயிலிலிருப்பவனின் மகனா இவன்!' என்று என்னைப் பற்றி அவள் ஏளனமாக நினைப்பாளோ என்கிற எண்ணமும் உணர்ச்சியும் தோன்றி வதைத்ததால், எப். ஏ. முடிந்ததும், பி. ஏ. வகுப்புக்கு நான் வேறு காலேஜ் மாறிவிட்டேன்.

அந்தத் தலையிறக்கம் மாறுவதற்குள் பார்வதியின் சகிக்கவிய லாத அவமானமும் ஒன்று சேர்ந்துவிட்டதால், அவ்வணங்கின் முகத்தில் விழிக்கவும் நான் வெட்கித் தலை குனிகின்றேன். அவ ளுடைய உதவியினால்தான் நான் குழந்தைகளை ஆச்சிரமத்தில் சேர்த் தேன். அப்போது கூட அவள் என்னைத் தன் வீட்டிற்கு வரும் படியாக வேண்டிக்கொண்டும் நான் இன்னமும் போகவில்லை.

லீலா! நான் இப்போது அங்குசென்றால் அவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாளோ? நம் பாட்டியைப்பற்றி அவள் மிகவும் பெரு மையாயும் பெருந்துணையாயும் எண்ணியிருக்கையில் அவளுடைய பேரன்தான் நான் என்றும், கிழவியின் குடும்பத்தில் இத்தனை ஊழல்கள் இருக்கின்றன என்பதையும் அறிந்தால், நம் பாட்டியின் மதிப்பல்லவாகுறைந்துவிடும்? ஆகையினால், லீலா! நீமட்டும்கௌரவ மான ஜமீந்தாரிணியாய்ச் சென்று பாட்டியை அழைத்துக்கொண்டு வருவதுதான் நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது—என்றான்.

லீலா :—பேஷ்! கோபி! உனது தீர்மானம் சற்றும் சரியே யல்ல. யார் யார் விதி எப்படி இருக்கிறதோ அப்படி நடக்கிறது. பாட்டியின் நல்ல குணத்திற்கும் ஒழுக்க சீலத்திற்கும் மற்றவர் களின் செய்கை மாசுபடுத்துமா என்ன? ஒருநாளுமில்லை. திமிர் படைத்த உன் பிதாவை, பாட்டி லஞ்சம் வாங்கச் சொன்னாளா! அன்றி, பார்வதியை மானஹீனமற்று தன் மதிப்பையும் கற்பையுங் குலைத்துக்கொண்டு சினிமாவில் சேர்ந்து பாழாகச் சொன் னாளா? என்னுடைய பிதாவை இன்ஷ்யூர் பணத்தைக் கபளீகரம் செய்துவிட்டுச் சிறைச்சாலைக்குச் செல்லச் சொன்னாளா! பெரியப் பனைக் கொலைக்கும் அஞ்சாதபடி வேலை செய்யச் சொன்னாளா? இதெல்லாம் வெறும் வார்த்தைகள். அந்தப் பெண் சம்மதித்தால் ஏன் உங்களுக்கு விவாகம் நடக்கக்கூடாது?

சரி! கோபி! இதைப்பற்றி இனி ஏன் வாக்குவாதம்? 5000 ரூபாயிக்கு, செக்கு ஒன்று எழுதிக்கொண்டு பிரயாணத்திற்குச் சித்தமாக இரு. நான் போய் இதை என் கணவரிடம் தெரிவிக் கிறேன்—என்று தீர்மானமான உத்தரவு போட்டுவிட்டுப் போய் விட்டாள். அதற்குமேல் அவன் என்ன செய்யமுடியும்? கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்பதுபோல் அவன் மனம் அலைந்தது.

நம்மாழ்வார் தானும்கூட வருவதாகத் தெரிவித்ததும் மூவரு மாகக் கிளம்பி காரிலேயே பிரயாணத்தைத் தொடங்கிவிட்டார்கள்.

ஜமீந்தாரிணியம்மாளிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் ஸௌம்யாபாய். தங்கம்மாளும் கட்டாயம் லீலாவே வருவாள் என்று எதிர்பார்த்து, ஸௌம்யாவின் மனத்தை அறிவதற்கு மிகுந்த ஆவல் கொண்டிருந்தாள்.

வழக்கம்போல் ஸௌம்யாபாய், பத்திரிகையைப் படித்துச் சொல்லும்போது ஓர் விவாகம் தடைபட்டு நின்றுவிட்டதால் அந்த மணமகன் கேஸ்போட்டிருப்பதாக வந்துள்ளவழக்கைப் படித்துக் காட்டிவிட்டு, "ஐயோ வெட்கக்கேடே! 55 வயதுக்குமேல்தான் விவாகம் செய்துகொள்வது வெகு அழகாயிற்றே! இந்த அழகில் கேஸ் போடுவதொரு வேடிக்கையா?" என்றாள்.

கிழவியும் இதுதான் சமயம் என்று அறிந்து, "குழந்தாய்! உல கத்தில் நடக்கும் வேடிக்கைகள் ஒன்றா இரண்டா! அதில் இதுவும் ஒன்று. கிழவனுக்குக் கொடுக்கப்படும் கல்யாண விபத்தைத் தடுத்த மகாராஜர்களுக்குக் கோடி புண்ணியம் உண்டல்லவா?" என்றாள்.

ஸௌம்யா :—ஆமாம்; கட்டாயம் புண்ணியந்தான் உண்டு. தாம் பெற்ற மக்களுக்கே தாம் துரோகம் செய்வதற்கொப்ப இம்

மாதிரி காரியம் செய்வதால்தான் தற்காலத்தில் சில பெண்கள் தமக்குத்தாமே கணவனைத் தேடிக்கொள்கிறார்கள்.

கிழவி :—ஏனம்மா! தனக்குத் தானே கணவனைத் தேடிக் கொள்வது நன்மை என்கிறாயா! தீமை என்கிறாயா! உன்னுடைய அபிப்பிராயம் ஏதும்மா!

ஸௌம்யா :—பெரியவர்கள் தேடிச் செய்வதில் தீமை என்று நான் முட்டாள்தனமாகச் சொல்லமாட்டேன். சரியான வழியில் செல்லாது பேராசைக்காகப் பெண்களைப் பாழ்செய்யும் பெற்றோர்களைத்தான் நான் கண்டிக்கிறேன். தானாகவே கணவனைத் தேடிக் கொள்வது மிகவும் சிலாக்யமென்பதும், எவனிடம் மனம் நாடுகிறதோ அவனை எல்லாம் மணப்பதென்பதும் வெறுக்கத்தக்க விஷயம். பெற்றோர்களும் மற்றோர்களும் ஒப்புக்கொள்ளத்தக்க யோக்கியதையுள்ள மனிதனைத் தேர்ந்தெடுத்தால், அது தவறில்லையல்லவா பாட்டி?

தங்க :—குழந்தாய்! நான் கேட்கிறேனே என்று கோபிக்காதே! உலக விவகாரங்களெல்லாம் தெரிந்த நீ ஏன் இன்னும் கல்யாணம் செய்துகொள்ளாதிருக்கிறாய்? எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் மிகவும் யோக்கியதையும் பொறுப்பும் வாய்ந்த சுத்த வீரன் இருக்கிறான். அவனை நீ மணந்துகொள்கிறாயா! அல்லது நீ யாரையாவது தேர்ந்திருக்கிறாயா? அப்படி யொன்றும் இல்லையென்றால் நீ என்னிடம் காட்டும் பிரியத்திற்கு அடையாளமாய் நான் உன் விவாகத்தை உன் பெத்த தாயாரைப்போல் முன்னின்று நடத்திவிட்டுத்தான் மறுவேலை செய்வேன். என்ன யோசிக்கிறாய்? உனக்கு இஷ்டமில்லையென்றால் தாராளமாகச் சொல்லிவிடு.

ஸௌம்யா :—பாட்டீ! என்னை என்ன இப்படி சிக்கலில் மாட்டவைத்துவிட்டாயே?

கிழவி :—அப்படியானால் உனக்குக் கல்யாணத்திலேயே ஆசை இல்லையா! செய்துகொள்ளப்போவதில்லையா? நீ அப்படியும் ஒரு போதும் சொல்லியதில்லையே! வேளை வரும்போது ஆகட்டும் என்றுதானே சொல்லி வருகிறாய். இப்போது வேளை வந்துவிட்டதாக என் நினைக்கக்கூடாது. இனி, உன்னை நான் விடமாட்டேன். என்னை நீ உன் பாட்டியைப்போல் நேசிப்பது உண்மையாக விருப்பின் என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். என்ன சொல்கிறாய்?

ஸௌம்யா :—பாட்டீ! எனக்கு உன் போன்ற ஓர் பெரிய துணை இருந்து இத்தகைய அருமையான காரியத்தைச் செய்வதாகச் சொல்லும்போது நான் எதற்காகத் தடை சொல்லப்போகிறேன். இருப்பினும், பாட்டீ! என்னை மன்னித்துவிடு. நான் ஏற்கெனவே

என் மனத்தில் ஒருவரைத் தீர்மானித்திருக்கிறேன். அவரையன்றி நான் மற்றெவரையும் மணந்துகொள்ளமாட்டேன்.

கிழவி இடைமறுத்து, "அப்படியானால் மெத்த சந்தோஷம். அந்த உத்தமவீரன் யாரு? தெரிவி. என் பேத்தி லீலாவிடம்சொல்லி நான் அதற்கும் ஏற்பாடு செய்கிறேன்" என்று வாய் தவறி ஆத்திர வேகத்தில் கூறிவிட்டாள்.

ஏற்கெனவே ஜமீந்தாரிணியின் பெயர் லீலாவதி என்று படித்திருப்பதால், இதைக் கேட்ட உடனே ஸௌம்யா திடுக்கிட்டவளாய், "என்ன! அந்த ஜமீந்தாரிணி லீலாவதி அம்மாள் உங்கள் பேத்தியா? பாட்டீ! என்னிடம் இப்படி ஏமாற்றிவிட்டாயே! நீ ஏன் அப்போதே சொல்லவில்லை. திக்கில்லாத அனாதை என்றல்லவா நீ சொல்லிவந்தாய்?"...என்று கிழவியையே மடக்கிக்கொண்டாள்.

இவள் கேட்டபிறகுதான் கிழவி, வாய் தவறி தான் சொல்லி விட்டதை எண்ணி விசனித்தாள். இத்தனை புத்திசாலியிடம் இனி ஒளித்துப் பயனில்லை என்றதை யுணர்ந்த கிழவி சாதுர்யமாய்ப் பேசத் தொடங்கி, "குழந்தாய்! நான் ஒன்றும் ஒளித்து உன்னை ஏமாற்றவில்லை. உன்னையோர் பேத்தியாக நான் பாவிக்கவில்லையா! அதேபோல் அவளையும் பேத்தியாகத்தான் நான் முறை கொள்வது வழக்கம். அதனால் கூறினேன். அது கிடக்கட்டும்; நான் கேட்பதற்குப் பதில் சொல்லு. அந்த வாலிபன் எங்கு இருக்கிறான்? அவன் பெற்றோர்கள் யார்? அவன் என்ன செய்துகொண்டிருக்கிறான்?" என்று மீண்டும் கேட்டாள்.

ஸௌம்யா :—பாட்டீ! அந்த மனிதரைப்பற்றிய பூர்வீகமோ தாய் தகப்பனைப்பற்றிய விவரமோ எனக்கு எதுவும் தெரியாது. அவரும் நானும் ஒன்றாகக் காலேஜில் படித்த காலையில் அவருடைய குணத்தழகும், ஒழுக்கமும், உத்தமமான நடத்தையும், புத்திசாலித்தனமும், அழகும் எல்லாம் ஒருங்குகூடி அவருக்கு என்னை என் மனமே அடிமையாக்கியது. அவர் நல்ல உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரென்றும் வீண் காசா மூசா கசடல்ல வென்றும் அவருடன் பழகியதில் நான் அறிந்தேன். அவ்வளவுதான் பாட்டீ!

பாட்டி :—(இடைமறுத்து) அப்படியானால் அந்தப் பையனும் உன்மாதிரி உன்னிடம் பிரீதி கொண்டானா! உனக்குத் தெரியுமா? உன் மனத்தை அவன் அறிவானா?

ஸௌம்யா :—சொல்வதற்குள் குறுக்குக் கேள்விகள் கேட்கிறாயே! காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாக இருப்பதுபோல் எனக்குள்ள மனோபாவம் அவரிடமும் பிரதி பலிப்பதாகவே அறிந்தேன். ஆனால், இதுவரையில் அவரும் சரி, நானும் சரி, வாய்விட்டுத் தெரிவித்துப் பேசியதில்லை. என்ன காரணத்

திஞல் அவர் F. A. படிப்பு முடிந்ததும் B. A.க்கு வேறு காலேஜில் சேர்ந்துவிட்டரோ அதுவுந் தெரியாது; அதனுல், அவரை மறுபடியும் பார்க்கக்கூட சந்தர்ப்பமில்லாது போய்விட்டது.

அதன் பிறகு அவர் எங்கிருக்கிருர் என்பது கூடத் தெரியாது. சில மாதங்களுக்கு முன்பு எனக்கே ஆச்சரியமாகும்படி ஏதோ குடும்ப விஷயமாக ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதன்பிறகு அவரும் வரவில்லே. பதிலுமில்லே. அதோ! எங்க காலேஜ் க்ரூப் போட்டோ மாட்டியிருக்கிறதே. அதில் அவரும் இருக்கிருர்— என்று கூறிக்கொண்டே படத்தைக் கிழவியிடம் கொண்டுவந்து நபரைச் சுட்டிக் காட்டினுள்.

கிழவி அந்தப் படத்தில் காட்டிய கோபியின் உருவத்தைப் பார்த்தவுடனே தடை கட்டிய நாகம்போல் அப்படியே அசைவற்று வைத்த கண்ணே வாங்காது பிரமித்துப் போய்விட்டாள். அவளே மீறி அவள் வாயில் "கோபீ! கோபீ! என்னருமை கோபீ!" என்ற வார்த்தை உதிர்ந்துவிட்டது.

கிழவியின் மாருட்டத்தைக் கண்டும் அவள் வாயில் வந்த வார்த்தைகளேக் கேட்டும் ஸௌம்யா ஆச்சரியக் கடலில் மூழ்கி, "என்ன பாட்டீ! ஏதோ சொல்கிருய்! வியப்புடன் விழிக்கிருயே! அவரை உனக்குத் தெரியுமா!" என்று அதிக ஆவலுடன் கேட்டாள்.

கிழவி :—ஆஹா! குழந்தாய். ஈசனின் மாயா விலாசத்தை என்னென்பேன்? தேடப்போன மூலிகை காலில் சுற்றியது போன்றும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலும் இப்போது விஷயம் முடிந்திருக்கிறது. நான் எந்த வாலிபனேப்பற்றி உனக்குச் சொன்னேனே அதே வாலிபனேத்தான் நீயும் காட்டியிருக்கிருய். இந்த அதிசயத்தை எண்ணித்தான் உள்ளம் பூரிக்கிறேன். இவன் மகா யோக்கியமான குடும்பத்தைச் சேர்ந்த பையன். சரியான புள்ளியைத்தான் நீ பிடித்திருக்கிருய்" என்று கூறும்போது தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். ஸௌம்யா அதை ஆவலுடன் பிரித்துக்கிழவியின் காதுகேட்க உரக்கப் படிக்கவாரம்பித்தாள்.

"ஸ்ரீமதி ஸௌம்யாபாய் அவர்களுக்கு! உபயகுசலோபரி.

தங்கள் அன்பான கடிதத்தில் நான் இழந்துவிட்டதாக எண்ணி இரவுபகலாகக் கலங்கித் தவித்த மாபெரும் புதையலே மீண்டும் அடைந்துவிட்டச் சந்தோஷத்தைக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தேன். நான் நாளேய தினம் காரிலேயே புறப்பட்டு வருகிறேன். இவ்வளவு உபகாரஞ்செய்து என்னுயிரினும் இனிய பாட்டியைக்

183037

காப்பாற்றியதற்கும், எனக்கு அவ் விஷயத்தைத் தெரிவித்ததற்கும் நான் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
நன்றியுள்ள,
லீலாவதி நம்மாழ்வார்."

அதைப் படித்ததும் ஆனந்தத்தினால் ஸௌம்யா ஒரு குதி குதித்தாள். "பாட்டீ! பாட்டீ! உன்னாலல்லவா இன்று நம் வீட்டிற்கு ஜமீந்தாரிணியம்மாள் வரப்போகிறார்கள். அனாதை நிலயத்திற்கும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்போகிறார்கள். நீ எத்தனை நல்லவள் பாட்டீ! நீ வந்தது முதல் என் மனதுக்கு அபாரமான சந்தோஷமும் நன்மைகளுமே நடந்து வருகின்றன. எத்தனையோ வருஷமாக மனத்தில் மறைந்த வாலிபனும் இனி உன் மூலம் வெளிப்பட்டு, நான் மகிழும் பேரானந்தமும் கிடைக்கப்போகிறது. உன் ஹ்ருதயம் மிகமிகக் குளிர்ந்தது. அதனால்தான் யாவும் நல்லதாகவே நடக்கிறது" என்று சந்தோஷ வேகத்தில் படபடவென்று பேசியவாறு பாட்டியை இறுகத் தழுவிக்கொண்டாள்.

'பாட்டீ! நான் இன்று பள்ளிக்கூடத்திற்கு லீவு எழுதியனுப்பிவிடுகிறேன்' என்று கூறி, லீவு கடிதம் உடனே எழுதியனுப்பிவிட்டு, அச்சிறிய வீடு முற்றும் ஒட்டடையடித்துச் சுத்தமாகப் பெருக்கி மெழுகி முத்து உருள்வதுபோல் அழகாகக் கோலமிட்டுவிட்டுத் தான் நல்ல அழகானதும் படாடோபமில்லாததுமான எளிய முறையில் உடையணிந்து அலங்காரம் செய்து கொண்டு, பின்னர் பலகாரம் காப்பி முதலியவற்றைத் தானே செய்துவைத்து, வீடுமுற்றும் சுத்தமாயும் அலங்காரமாயும் சீர்திருத்தினாள்.

கிழவியை நல்ல வஸ்திரத்தைப் பலவந்தமாக அணியச் செய்தாள். காரிலேயே வருவதாக எழுதியிருந்ததால், ஒரு குறித்த நேரம் கணக்காகத் தெரியாதாகையால் எங்கு கார் ஓசைக் கேட்டாலும் குழந்தையைப்போல் துள்ளிக் குதித்து வீதிப் பக்கம் வந்து எட்டி எட்டிப் பார்த்து ஏமாந்து உள்ளே செல்வதாக விருந்தாள்.

கிழவியின் மனத்தில் பொங்கும் ஆனந்தத்திற்கும் சந்தோஷத்திற்கும் எல்லையே இல்லை. லீலாவைப் பார்க்கப்போகும் இன்பம் ஒரு புறம். ஸௌம்யாவைப் பற்றி லீலாவிடம் தெரிவித்து அவள் விரும்பும் கோபிக்கும் அவளுக்கும் விவாகத்தை நடத்திவிடவேண்டும் என்கிற பேராவல் ஒருபுறம். இதற்கு மத்தியில் தன் பெரிய மகனின் விஷயம் என்னவாயிற்றோ என்கிற கவலையும் ஒருபுறம் வதைக்காமல் இல்லை; பலவிதமான உணர்ச்சியுடன் லீலாவைக் கிழவி எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

பிற்பகல் மூன்று மணிக்கு ஸௌம்யாவின் வீட்டு வாசலில் பிரம்மாண்டமானதோர் மோட்டார் வந்து நின்றது. இந்தச் சப்தத்தைக்கேட்டவுடனே கிழவியின் இதயத்தில் ஓர் இன்ப ஊற்று குபீரென்று சுரந்தது. ஸௌம்யாவுக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை "பாட்டீ! பாட்டீ! வாசலில் கார் வந்து நிற்கிறது" என்று ஒரு துள்ளு துள்ளிக் கூவியபடியே வாசலுக்கு ஓடி ஜமீந்தாரிணியை எதிர்கொண்டழைக்கத் தயாராய் நின்றாள்.

காரிலிருந்து சாந்தமும் அழகும் ஒருங்கே திரண்டொழுகும் லீலா முதலில் இறங்கினாள். லீலாவைப் பார்த்ததும் பிரமிப்பும் களிப்புங்கொண்ட ஸௌம்யாபாய், "வாருங்கள். வாருங்கள்" என்று அன்புடன் அழைத்தாள். புன்சிரிப்புடன் லீலா ஸௌம்யாவின் அழகைப் பார்த்தபடியே ஆச்சரியத்துடன் வந்தாள்.

லீலாவின் கணவன் இறங்கியதும் கோபி இறங்கினான். ஸௌம்யா கோபியைப் பார்த்தவுடனே திடுக்கிட்டு, தடைகட்டிய நாகம்போல் 'கோபியா!'...என்று தன் வாய்க்குள் சொல்லிக்கொண்டு சில வினாடிகள் தம்பித்துவிட்டாள். அவளை யறியாது ஒரு சக்தி அவள் இதயத்தில் மின்சாரம்போலத் தாக்கியது.

'கள்ளனுக்குள் குள்ளன்' என்பதுபோல் சகல ரகஸியமும் தெரிந்த லீலா இதைக் கவனிக்காம லிருப்பாளா? இதைப் பார்த்த இன்பம் ஒருபுறம். தன் பாட்டியைப் பார்க்கப்போகும் இன்பம் மற்றொருபுறம்பொங்குகிறது. ஸௌம்யாவைப் பார்த்து "அம்மணீ! வியப்புறவேண்டாம். சந்தேகமும் வேண்டாம். நீ பார்க்கும் ஆசாமி உன் கோபிதான்" என்று கூறியதைக் கேட்டபிறகே ஸௌம்யாவுக்குத் தன் ஞாபகம் வந்தது. லஜ்ஜையும், லீலாவுக்கு இந்த ரகஸ்யம் எப்படி தெரிந்தது என்ற அபாரமான ஆச்சரியமும் உண்டாகிவிட்டன.

அசட்டுத்தனம் வழிய தலைகுனிந்துகொண்டே "வாருங்கள். வாருங்கள்" என்று லீலாவின் கையைப்பிடித்துக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள். இதற்குள் உள்ளேயிருந்து வந்த கிழவி லீலாவை சேர்த்தணைத்துக்கொண்டு 'என் கண்மணீ! என் ஜீவமணீ! லீலா!' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

வண்டியிலிருந்து இறங்கிய கோபி ஸௌம்யாவை நோக்கி, "ஸௌம்யா! சவுக்யமா! நான் முன்பே வராததற்கு மன்னிக்க வேண்டும். என் பாட்டி, என் சகோதரி எல்லோருடைய மத்தியில் தான் உன்னைப்பார்க்கவேண்டு மென்ற ப்ராப்தமிருந்தது" என்று கூறிவிட்டு, பாட்டீ! என்று ஓடிப்போய் கிழவியைக் கட்டித் தழுவிக்கொண்டான்.

கிழவிக்குள்ள அப்போதைய இன்பஉணர்ச்சியில் அவளுடைய இதயமே வெடித்து விடும்போலாகிவிட்டது. நம்மாழ்வாரும், ஸௌம்யாவும் இவர்களைப் பார்த்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் முட்ட நின்றார்கள். ஸௌம்யாவுக்குத் தன் கோபி இந்தக்கிழவியின் பேரன் என்பதை யறிந்ததும் கூறத்திறமற்ற சந்தோஷமும், வியப்பும் உண்டாகி, இமைகொட்டாது அவர்களைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சில நிமிடங்கள் எல்லோரும் மெய்ம்மறந்த இன்பத்தில் மூழ்கிப் பதுமைபோல் கிடந்தார்கள். பிறகு லீலா சற்றுத் தெளிவு பெற்றவளாய் எழுந்து, தன் பர்த்தாவின் அருகில் வந்து "நாதா! இறந்து விட்டதாகச்சொல்லி, நான் இரவு பகல் தவித்தேனே அந்த விலையிலாத பொருள், பொக்கிஷம் இதோ இருக்கும் என் பாட்டிதான்......பாட்டீ! இவர்தான் என் கணவர்.

என்று முடிப்பதற்குள், நம்மாழ்வார் கிழவியே ப்ரமிக்கும் படி அவர்களை நமஸ்காரம் செய்து விட்டு, "பாட்டீ! உங்கள் பேத்திக்கு இனிமேல்தான் உயிர் சரியானபடி நிலையில் நிற்கும். அவள் இரவு பகலாக உங்களை எண்ணிக் கண்ணீர்விட்டது அந்தப் பகவானுக்கே வெளிச்சம். அவர்தான் சித்தமிரங்கி உங்கள் பேரனின் மனைவியாகப்போகும் நாரீமணியின் மூலம் உங்களைக் காப்பாற்றி உங்கள் இருப்பிடத்தையும் எங்களுக்குக் காட்டினார்."

என்று நம்மாழ்வார் அதிக சந்தோஷத்துடனும் சாதுர்யமாயும் பேசியதைக் கேட்ட கிழவிக்கு ஒன்றுமே புரியவில்லை. நம்மாழ்வார் வெறும் பயித்யமென்றது மட்டும் அவளுக்குத் தெரியுமே யன்றி, இந்தத் தெளிவின் ரகஸ்யம் அவளுக்கு எப்படித் தெரியும்? ஆகையால் நம்மாழ்வாரையும் லீலாவையும் மாறிமாறிப் பார்த்தாள்.

இந்தப் பார்வையின் தாத்பர்யத்தை யறிந்த கோபி, "பாட்டீ! நீ ப்ரமித்துப் பார்ப்பதுபோல் ஒன்றுமில்லை. கடவுளின் கிருபையாலும் லீலாவின் அதிர்ஷ்டத்தினாலும் அவர் இப்போது முற்றிலும் புனர்ஜென்மம் எடுத்துவிட்டார். பழைய நம்மாழ்வாரே மறைந்து போய்விட்டார்" என்று நடந்த வரலாற்றைச் சுருக்கமாக உரைத்தான்.

இதைக் கேட்டதும் கிழவியின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. பொங்கி வரும் சந்தோஷத்தில் பேசத் தெரியாமல் திகைத்தபடியே நம்மாழ்வாரைத் தடவிக்கொடுத்து, "தீர்க்காயுஸா நன்னாயிருக்கணும். உங்க குடும்பத்தின் விளக்கு என்றும் மலைமேலிட்ட விளக்குப்போல் விளங்கவேணும். நிறைய குழந்தைகள் பிறக்கணும்" என்று மனமார வாழ்த்தினாள்.

கிழவியின் மனம் சந்தோஷத்தினுல் நிரம்பிப்போய்க் குழம்பிக் கிடப்பதால் ஒன்றுமே தெரியாது விழிக்கிருள். ஸௌம்யாவையும் கோபியையும் பார்த்து ஏதோசொல்வதற்கு வாயெடுத்தாள். இதற்குள் லீலா, பாட்டிக்கும் விஷயம் தெரிந்துதான் பேச வாயெடுக்கிருள் என்பதை உணர்ந்து, "பாட்டீ! நீ சொல்லப்போகும் விஷயம் எனக்கும் தெரியும். சகல ரகஸ்யமும் கோபியால் அறிந்தேன். கூடிய சீக்கிரத்திலேயே இவர்களுக்கு விலக்கமுடியாத விலங்குபோட்டு முடித்துவிட்டு, எங்கள் ஜெமீன் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஹைஸ்கூலில்அவர்களே உபாத்தியாயினியாகவேவேலேயினும் போட்டுவிடத் தீர்மானித்துவிட்டேன். சரிதானே! பாட்டீ!" என்றுள்.

ஸௌம்யாவுக்கு ஒன்றுமே தெரியாது எல்லாம் விசித்திரமாயும் ஆனந்தமயமாயும் இருந்தது. வாய் திறந்துபேச நினைக்கிருள். ஆனால் தடுமாற்றமும் ஒருவிதமான திகைப்பும் உண்டாகி லஜ்ஜையுறச்செய்கின்றது. கோபியின் மூலமாகத்தான் இவ்விஷயம் அந்த அம்மாளுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்று தெரிந்துகொண்டு இமைகொட்டாது கோபியையும் மற்றவர்களையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு நின்றுள்.

லீலாவுடன் வந்த ஆள் அவள் கொண்டுவந்த பழவகைத் தட்டுக்களைக்கூடத்தில் கொண்டுவைத்தான். லீலா, தன் பாட்டியை நோக்கி, "பாட்டீ! இதெல்லாம் என்ன தெரியுமா! இன்று முகூர்த்த நாளாகையினுல் கோபிக்கும் ஸௌம்யாபாயம்மாளுக்கும் நிச்சயதார்த்தத்தைச் செய்வதற்காக வரிசை தட்டுகள் கொண்டு வந்தேன். பாட்டீ! உன் கையினுல் இதோ இந்த 5000 ரூபாயை அந்தம்மாளிடம் கொடுத்துவிடு. அனதை நிலயத்திற்கு அவர்கள் சேர்த்துவிடட்டும்" என்று கூறியபடியே கத்தை நோட்டுகளை எடுத்துக்கொடுத்தாள்.

கிழவிக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லே ஏது? ஸௌம்யாவை நோக்கி, "குழந்தாய்! இப்படி வாம்மா! ஏன் தூர நிற்கிருய்? இனிமேல் வெட்கமென்ன? கல்யாணம் வெகு விரைவில் நடந்துவிடும். இந்தா! இத்தொகையைப் பெற்றுக்கொள்ளு" என்று கூறி அன்பும் ஆனந்தமும் பொங்கியவாறு ஸௌம்யாவிடம் கொடுத்தாள்.

ஸௌம்யா இத்தனை பணத்தையும் பார்த்து வியப்புற்று "என் பாட்டீ! ஆயிரம் ரூபாய்தானே விளம்பரத்தில் போட்டிருந்தது. பணம் அதிகமாக இருக்கிறதே!" என்றுள்.

லீலா :—அம்மணீ! நீங்கள் இந்தப் பணத்தை இச்சிக்காது, ஓர் தர்ம ஸ்தாபனத்திற்குக் கொடுப்பதாய் எழுதி இருந்ததற்கு மிக்க

சந்தோஷப்பட்டு நல்ல காரியத்திற்காக உபயோகப்படுத்துவதால் நானே கூட 4 ஆயிரம் சேர்த்துக் கொடுக்கச் சொன்னேன். என் பர்த்தாவின் விருப்பமும் அதுவே யாகும். இனி, யோசனையே வேண்டாம்—என்றாள்.

ஸௌம்யா பணத்தைப் பாட்டியிடமே கொடுத்துவிட்டு தான் தயாரித்திருந்த பலகாரங்களையும் பானத்தையும் எல்லோருக்கும் கொடுத்து உபசரித்தாள். எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டே இருக்கையில், லீலா முத்துசாமியின் கதியை மெல்ல கிழவிக்கு எடுத்துக் கூறிவிட்டாள்.

பெத்த மனம் பித்து என்ற பழமொழிப்படிக்குத்தங்கம்மாளின் மனம் தவித்தது. "இப்படித்தான் ஒரு நாளைக்கு நடக்கும் என்று எனக்குத் தெரியும். உலகத்தில் புருஷன் சரியான மார்க்கத்தை விட்டுப் பிசகுவதாய்த் தெரிந்தால், அவனை நல்வழியில் திருப்பப் பல விதமான முயற்சிகள்செய்து பாடுபட வேண்டியவள் மனைவியே யாவள். ஒரு குடும்பத்தின் சாபத்தில்தான் பரிசுத்தமான ஆறு ஓடுவதைக் கண்ணால் பார்க்காமல் கானல்நீரை நம்பியோடும் கதியமைந்து மூன்றும் மூன்று விதமாகிவிட்டது. எல்லாம் நான் செய்த பாவம் என்று கண்ணீர் உதிர்த்தாள்.

லீலா கிழவியைத் தேற்றி, "பாட்டீ! நீ செய்த புண்ணியம் ஒருபுறம் இருப்பதனால்தான் நாங்களாவது சுகப்படுகிறோம். எல்லாம் விதியின் கூத்து. கபட உலகத்தின் திருவிளையாடல். கலியின் விசித்திரம்...சரி. இனி நேரமாகிறது. நாம் எல்லோரும் வஸந்தபுரிக்குப் புறப்படலாமா! பாட்டீ! உன் பேரனுடைய அகமுடையாளையும் இப்போதே உன்னுடன் அழைத்துக்கொண்டு கிளம்பு. இனி அந்தம்மாளைத் தனியாக விடமுடியாது. என்ன கோபி! உம். தயாராகச் சொல்லு" என்று குறும்பாகக் கூறினாள்.

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது அதுவும் நழுவி வாயில் விழுந்தது" என்ற பழமொழி ஸௌம்யாவுக்கு மிகவும் பொருத்தமாகிவிட்டது. கிழவியும் ஸௌம்யாவை விட்டு இருக்க முடியாதென்று முன்னரே தீர்மானித்துவிட்டதால், அவள் நினைத்த காரியமும் கைகூடிவிட்டதில் பரம சந்தோஷமடைந்து பிரயாணத்திற்குத் தயார் செய்தாள். ஸௌம்யாவும் அளவிலாத ஆனந்தத்துடன் அவர்களுடன் கிளம்பினாள்.

பிறகு எல்லோரும் தங்கள் தங்கள் பிரிந்த காலத்தின் வர்த்தமானங்களைப்பற்றிக் கூறிக்கொண்டே வஸந்தபுரிக்குப் பிரயாணம் செய்தார்கள்.

# 30

சீரழிந்து, மானங் குலைந்து ஆஸ்பத்திரியில் கிடந்த பார்வதி, பலாத்காரஞ் செய்து தன் தாயாரை அனுப்பிவிட்டபிறகு, தான் இனி இந்த உலகத்தில் வாழக்கூடாது. இங்கிருந்து எப்படியாவது தப்பித்துக்கொண்டு வெளியே சென்று முதலாளியைப் பழிக்குப் வழி வாங்கிவிட்டு உயிரை விட்டுவிட வேண்டும் என்று வைராக்கியமான முடிவு செய்துகொண்டாள்.

அவளை முதலில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனபோது ஸ்பெஷல் வார்டில் ஸ்பெஷல் அறையில் விட்ட முதலாளி அன்று அவளுடைய தாயாரும் தமயனும் வந்ததை அறிந்த பிறகு மறுதினம் முதல் தான் ஸ்பெஷல் வார்டில் வைத்து பணங் கொடுக்க முடியாது. தர்ம வார்டில் மாற்றிவிடுங்கள் என்று ஆஸ்பத்திரிக்குத் தகவல் கொடுத்துவிட்டான்.

மறுதினமே ஆஸ்பத்திரிக்காரர்கள் அவளைத் தரும வார்டிற்குக் கொண்டுபோய் ஒருபக்கம் போட்டுவிட்டார்கள். தன்னை மாற்றிய விவரமே அறியாத பார்வதி, "என் இன்று இங்கு இப்படி தள்ளி விட்டார்கள். இதென்ன காரணம்?" என்று ஒன்றும் புரியாமல் தனக்குள் திகைத்தாள்.

அங்கு வந்த ஒரு நர்ஸைப் பார்த்து, மற்றொரு நர்ஸ் ஏளனமாயும், குத்தலாயும், ஒருமாதிரி நகைத்துக்கொண்டே "இது புது சரக்கு; சினிமாக்காரி; ஏதோ திருட்டுத்தண்டாபேரம் செய்து விட்டு, ஆஸ்பத்திரி உதவிக்கு வந்துவிட்டாள். முதலாளி இனிமே காப்பாத்தமுடியாதென்று தர்ம வார்டுக்குத் தள்ளிவிடச் சொல்லி விட்டானும். மூஞ்சியெ பாரு. ஸினிமா மோகத்தின் விபரீத சுகம் ஒழுகுகிறது!" என்று பேசும் வார்த்தைகள் பார்வதியின் இதயத்தைப் புண்படுத்திவிட்டன. "இப்படியா அந்தப் படுபாவி செய்து விட்டான். "உன்னை யானை யாக்குகிறேன். பூனை யாக்குகிறேன்" என்று கூறி, ஆசைக்காட்டி என் மதியை மயக்கி மோசம் செய்தது மன்னியில் இனி என்னை ஒருவிதத்திலும் உருப்படவிடாது பாழாக்கி இப்படியுமா தள்ளச் செய்தான். இருக்கட்டும். அக்கிரமத்தில் புகுந்தது புகுந்தேன். இனி, முழுதும் அக்கிரமமே செய்துவிட்டு நான் தற்கொலை புரிந்து கொள்கிறேன்" என்று தனக்குள் திட சங்கல்பம் செய்துகொண்டாள்.

அவளுடைய கற்பழிந்து, வாழ்வு சிதறி சின்னபின்னமாகிவிட்ட விசனத்தைவிட முதலாளியின்மீது அடங்காத ஆத்திரமும் ஆவேசமும் உண்டாகிவிட்டன. ஆஸ்பத்திரியைவிட்டுப் போய்விடுகிறேன்

என்ருலும் விடமாட்டேன் என்கிருர்கள். அங்கு நடக்கும் அவமதிப்பும் சீர்மாருன நடத்தையுமோ இவளால் சகிக்கமுடியவில்லை.

ஒரு வாய் கஞ்சியோ, காப்பியோ, ஒரு ரொட்டித்துண்டோ எதுவும் கிடைப்பதே துர்லபமாகிவிட்டது. பசியோ தாங்கமுடியாது வதைக்கின்றது. சப்பையில் அடிபட்ட வலி ஒருபுறம் கொல்லுகிறது. முதலாளி, கோமளி முதலியவர்களின் பேரில் வரும் ஆத்திரமோ அவளை மிஞ்சி எழுகிறது. இத்தனை சங்கடத்தில் தன்னை வெளியில் அனுப்பவும் அனுமதிக்கப்படாத துக்கம் மிகவும் அவளை வாட்டியது.

இந்தத் தர்ம வார்டுக்கு மாற்றப்பட்டபிறகு சினிமா சம்பந்தப்பட்ட எவருமே அங்கு வந்து 'இருக்கிருளா ! இறந்தாளா !' என்று கூட விசாரிக்கவில்லை. விரதங் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும் என்பது ஒரு பழமொழி. அதுவும் தனக்குப் பாழாகிவிட்டதால், தவித்தவாறு சில தினங்களைக் கடத்தினுள்.

பிறகு எப்படியோ சண்டை பிடித்துக்கொண்டு வெளியே வந்து விட்டாள். சப்பையில் அடிபட்டுச் சிறிது ஊனமாகிவிட்டதால் முன்போல் ஒய்யாரமான குலுக்கு மினுக்கு தளுக்கு, அன்ன அழகு நடைகள் எல்லாம் அடியோடு மறைந்துபோய் காலை இழுத்து இழுத்து நடக்கும் விதியமைந்துவிட்டது.

ஆஸ்பத்திரியில் நடமாடுவதைவிட வீதியில் வந்தபிறகுதான் தனது பரிபவமும் கோர நடையின் விகாரமும் நன்கு தெரியவந்தது. துக்கம் துக்கமாய்த் தொண்டையை அடைத்துக்கொண்டு பொங்கி வருகிறது. தான் இனி எங்கு போவது? போகிறதற்கு இடந்தான் ஏது? போகத்தான் மூஞ்சியேது? தன் நிலைமையின் கண்ருவியைப் பார்க்கப் பார்க்க அவள் நெஞ்சம் வெடித்துவிடும் போலாகிவிட்டது.

"கெட்டது கெட்டோம். பழிக்குப் பழி எப்படியாவது வாங்கிவிடுவதே சரி" என்ற ஆக்ரோஷத்துடன் சினிமாக் கம்பெனியில் தான் அட்டகாஸம் நடத்திய வீட்டிற்குச் சென்ருள். அங்கு வாசலில் டுலெட் என்று தொங்கிய அட்டை இவளைத் தூக்கி வாரிப்போட்டது. "காலியா!...வீடுகாலியா!" என்று எண்ணியபடி சற்றுத் திகைத்து நின்ருள்.

தோட்டக்காரன் மட்டும் செடிகளுக்குத் தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் வெகு ஆவலுடன் அவனை அழைத்து விவரம் விசாரித்தாள்.

தோட்ட :—அம்மாடீ ! ஒங் கதி இப்படியா ஆயிபூட்டுது. ஐயோ ! என் தாயே ! சினிமா சொகம்போதுமா ! வெளக்குலே

வச்சு எரிக்கிறுங்க. வெய்யல்லே வச்சி கொல்றுங்க. தூக்கமில்லாமெ அடிக்காரங்க இண்ணு ஜனங்க அடிச்சிகிட்டே இந்த எயவுலேதான் வந்து உயிந்து சாவுதுங்க. ஒனக்குச் சமாசாரம் ஒண்ணுந் தெரியாதா ?

பார்வதி :—எனக்கு ஒன்றும் தெரியாதே ! நான் ஆஸ்பத்திரியிலே இருந்து இப்பதான் வரேன். என்ன சமாசாரம் சொல்லேன்.

தோட்ட :—ஐயோ ! ராமா ! சமாசாரம் இண்ணு இருக்குது. மோட்டாரு விபத்துக்கு அப்புறம் அல்லாம் விபத்தாவே பூட்டுது. படம் பாதிலே இந்தகதியாச்சா ! மொதலாளி தடபுடல் டாக்கீஸ் இண்ணு பேருவச்ச மாதிரியே தடபுடல் பேர்வழிதானும். கையிலே மொதலு இல்லாமெ வாய்ப்பந்தல் போட்டு படமெடுக்க ஆரம்பிச்சுட்டானும். பொண்டாட்டி நகையே வித்து கொஞ்சங் கொஞ்சம் பணம் முன்னுலே வாய்க்கரிசி போட்ராப்பிலே ஒங்களுக்குப் போட்டானே அவ்வளவுதானும். மிச்சம் அல்லாங் கடனும்.

ஆசாமி கீழே விழுந்து காலு போச்சோ இல்லேயோ ! தடபுடல் டாக்கீஸ் கம்பெனியும் காத்துலே பறக்க வாரம்பிச்சுட்டுது. கடன்காரங்க சுத்திவளேச்சிக்கினுங்க. ஊட்டுக்காரன் சாமானே தூக்கி வாசல்லே போட்டுட்டான். ஸ்டுடியோக்காரன் பாதி படத்தை அப்படியே எடுத்துகினன். சமயலுக்காரங்க ஆம்பிட்ட சொம்பு தவலே பாத்தரங்களே சுருட்டிகினு ஓடிட்டாங்க.

ஐயோ ! பாவம். நடிக்கரத்துக்காவ வந்த அப்பாவிங்கத்தான் கையிலே காலணு இல்லாமே ஒருவாய் சோத்துக்கு வயிஇல்லாமெ நடுத்தெருலே நின்னுபூட்டாங்க. அவங்களுக்கு இந்த ஊரு முன்னே தெரியுமா ! பின்னே தெரியுமா ! ஏழை பாழெங்க கானல் நீரை நம்பி ஓடிவந்த மானெப்போல வந்து மாட்டிக்கினுங்க. அப்பப்ப ! கஞ்சி இல்லே. தண்ணியில்லெ. கையிலே காலணு இல்லே. அவங்க ஊருக்கு எப்படித்தான் போயி சேருவாங்க ?

பார்வதி :—ஐயோ ! பாவமே ! அப்றம் அவாகதி என்னதான் ஆச்சு ?

தோட்ட :—ஆவுரது என்னம்மா ! தெருவிலே அழுது தேங்க முயிச்சாங்க. ஒரு மரத்தடிலே பட்டினியா கெடந்து செத்தாங்களாம். மல்லாக்கொட்டையும் பட்டாணிகடலேயும் வாங்கி தின்னு ஒருவேளே போதைக் கயிச்சாங்களாம். அது எந்த மூலேம்மா !

யாரு வூட்டிலேயும் சேக்கவும் மாட்டேன். எடங்கொடுக்கவும் மாட்டேன். சினிமாக்காரிக்கு யாரு சோறுபோடுவா ? யாரு வேலே கொடுப்பா ! இண்ணு பேசிக்கினுங்களாம். ஏதோ கையிலே காலணு ஒருதுட்டு இருக்கிறவங்களும் நகை, நட்டு

போடவே இருக்கருவங்க அதை வித்துப் பணமாக்கிக்கிட்டு ஊருக்குப் பூட்டாங்களாம். மீதிபேரு இன்ன ஆனுங்களோ! யாரு கண்டது. ஒங் காலும் இஸ்திகிச்சா!

பார்வ:—ஆஹா! இத்தனே அலங்கோலமா ஆய்விட்டது. மொதலாளி என்னவானன். பிழைத்தான செத்தான! அந்த அக்கிரமக் காரப்பிசாசு கோகிலாவும் அவள் தாயாரும் என்ன ஆனர்கள்? அதைச் சொல்லு.

தோட்ட :—ஆவதென்ன இருக்குது? மொதலாளி கீரானே பெருச்சாளி அவன் காலெ வெட்டிட்டாங்களாம். கட்டெவச்சி கிட்டுத்தான்நடக்கணுமாம். கோகிலம்மா அந்த மொதலாளியெயும், மத்தவங்களையும் ஆட்டிவச்சாளே! அந்த கைய்யே பகவான் ஒடிச்சிப் புட்டாராம். அவங்க அம்மாளே பயித்தியக்கார ஆச்சிபத்திரிக் கல்லா அனுப்பிட்டாங்களாம். மூணு பேரு வேலேயும் முடிஞ்சு பூட்டுது. ஆனுக்கா மொதலாளியை பத்தி ஏதோ சமாச்சாரம் நேத்திப்புடுச்சு ஒலாவுது. அவன் வெஷங் குடிச்சி எறந்து பூட்டானும். ரகஸியமா கசமசண்ணு பேசிக்கிறுங்க. சரியா தெரியல்லே'' என்ருன்.

இதைக் கேட்ட பார்வதிக்கு மனம் பத்தி எரிந்தது. ஊரைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் எமகாதனுக்கு சாவு வந்துவிட்டதென்ருல் அது அவளுக்குப் பிடிக்கவில்லே. இருந்து, தான் செய்த பாவத்திற்குத் தான் அனுபவித்தல்லவோ சாகவேண்டும். இப்படியுமா அவன் காலம் முடிவது என்று நினைக்கும்போது பொருமைத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

அதற்குமேல் அவளால் அங்கு நிற்கமுடியவில்லே. முகத்தை முக்காடிட்டு மூடிக்கொண்டு வெகு வைராக்கியத்துடன் ஆற்றை நாடி நடந்தாள். "அரசனே நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை போல் நம் கதி முடிந்தது. அல்ப ஆசைக்கு இச்சைப்பட்டு ஆயுள் பரியந்தம் அழியாத இழிவையும் அவமானத்தையும் தேடிக்கொண்டோம். என்னைப்போல் இன்னும் எத்தனே பேதைப் பெண்கள் இம்மாதிரி அவகேட்டை யடைந்து அற்பாயுளாய் இறந்தார்களோ! அன்றி அவதிப்பட்டுச் சாகிருர்களோ! ஐயோ! பெண்களின் மானத்தைக் குலேக்க, வாழ்வைச் சிதைக்க, இதயத்தை வதைக்க இப்படிப்பட்ட முதலாளி பூதங்களும், பாழும் சினிமாக் கம்பனிகளும் அந்தக் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்?

அம்ருதத்தை அள்ளி இரைத்த கரத்தால் விஷத்திற்கொப்பான இப்பாழும் கம்பெனியை ஏன் படைத்தாய்? அதிலும் உன்னதமான கம்பெனிகள் சிலவற்றைக் காட்டியிருப்பதில் என்னே ஏன் தள்ளி இருக்கக் கூடாது? ஐயோ, விதியே! உன் வஞ்சனே இதுதான?''

என்று கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டே மனம் வெடிக்க நடந்து சென்றாள்.

அப்பொழுது சூரியன் அஸ்தமிக்கும் சமயமாகிவிட்டது. தங்கத்தை உருக்கி வார்த்ததுபோல இயற்கை யன்னையின் இன்பக் காட்சி உலகைப் பரவசமுறச் செய்தது. ஆற்றை நாடிச் சென்ற பார்வதியின் மனம் படும் பாட்டைக் கூறத் திறமன்று.

ஆதியில் தான் தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி எண்ணி மனக்கோட்டை கட்டி அக் கோட்டையில் ஆனந்தமாயும், மனோரம்யமாயும் வாழ்வதாக நினைத்துப் பூரித்த பழங்கால உணர்ச்சிகள் எல்லாம் அவளது மனத்தில் தோன்றி வதைத்தன. அம்மாதிரி எண்ணிய அதே நெஞ்சு, அவ்வானந்தத்தை யனுபவித்த அதே இதயம், அக் கற்பனைக் கோட்டையைக் கட்டிய அதே மனம், இத்தனையும் தாங்கிய அதே சரீரம் இப்போது என்ன நிலைமையிலிருக்கிறது.

காரியுமிழ்ந்து, கண்டோர் சிரித்து, மானம் இழந்து தற்கொலை புரிந்துகொண்டு இந்த ஆற்றோடு அடித்துச்செல்லப் போகிறதல்லவா ? என்று நினைக்கும்போது அவளை மீறி துக்கம் பொங்கி வந்து விட்டது. " சீச்சீ ! இந்த உதவாக்கட்டைக்கு இன்னும் யோசனை வேறா ? என் அருமை கோபி அன்று கூறியதைப்போல் இனிமேல் இப்பாவியின் மறைவை உலகம் கோருமேயன்றி உயிர் வாழுவதை விரும்பாது. இதோ ! இதோ ! இறைவா ! நீ கொடுத்த இப்பாப சடலத்தை நீயே எடுத்துக்கொள்ளு. இந்தப் பாவியின் மூலம் ஒரு பாடத்தைக் கற்பித்து இனியாவது ஜனங்கள் இக் கபட உலகத்தில் கானல்நீரை நம்பி மோசம் போகாது ரக்ஷித்தருள்செய் " என்று அதீதமான மன வைராக்கியத்துடன் கூறிக்கொண்டே நிர்மானுஷ்யமான அந்த ஆற்றில் தடாரென்று குதித்தாள். அவள் புலம்பலும் மனவேதனையும் நீங்கி, குளிர்ச்சியுண்டாகப் பெற்றுக் காற்றுடன் கலந்து நிச்சந்தியான உலகப் பிரயாணத்தைத் தொடங்கி விட்டாள்.


# அம்ருததாரா

இதுவரையில் நீங்கள் படித்திராத அநுபவமும், ஆச்சரியமும், நீதியும், திடுக்கிடும் சம்பவங்களும், கனவிலும் கருத முடியாத அற்புதச் செய்கைகளும் கூடிய அருமையான நாவல்.

விலை அணா நான்கே.

# 31

கண்ணை மூடிய ஸாவித்திரிக்கு மறுபடியும் தெளிவு வருவதற்கு வெகு நேரமாகிவிட்டது. இதற்குள் இந்த அதிசயம் ஊர் முற்றும் தெரிந்துவிட்டதால், கண்காக்ஷிச் சாலைக்குப் போவது போல் கூட்டங்கூடி அந்த ஆச்சரியமான—சோதனையின் பிம்பமாகிய—ரெட்டைப் பிறவிகளைப் பார்த்து, தம் தம் மனம்போன வாறு பேசவும் அந்தத் தம்பதிகளைத் திட்டவும் ஆரம்பித்தார்கள். சந்தேகமாகத் தோன்றிய விஷயத்தைக்கொண்டே வம்பளக்கும் அம்மாமார்கள் நேருக்குநேர் இம்மாதிரி அகப்பட்டுவிட்டால், சும்மா இருப்பார்களா!

எத்தனையோ பெரிய கோட்டை கட்டிக்கொண்டிருந்ததெல்லாம் ஒரு நொடியில் அவள் தலைமேலேயே விழுந்துவிட்டதென்றால் அதை அந்தப் பலஹீனநிலைமையில் ஸாவித்திரி எப்படித்தான் தாங்குவாள்? வெகு நேரம் தெளியாததால் அவளுடைய பெண்ணும் பிள்ளையும் பயந்துபோய் அழ வாரம்பித்துவிட்டார்கள். சிலர் வைத்தியர்களை அழைத்து வந்தார்கள்.

பலவிதமான சிகிச்சைகள் செய்த பிறகு ஸாவித்திரிக்கு கொஞ்சம் தெளிவு உண்டாகியதும் கண்ணை இருக மூடியபடியே "ஐயோ! நான் கண்ணைத் திறக்கமாட்டேன். அந்த ம்ருத்யுக்கள் இறந்துவிட்டனவா, இல்லையா! அந்தக் கொலை பாதகங்கள், கோர ஸ்வரூபங்களின் உயிர் போயிற்ரு இல்லையா?" என்று கத்தினாள்.

அவளுக்குப் பிறர் பதில் சொல்வதற்குள் தாமே பதில் சொல்வதுபோல் அவ்விரு விநோதப் பிறவிகளும் க்ரீச் க்ரீச்சென்று விகாரமாகக் கத்தியதைக் கேட்டதும் எரிமலையே தன் தலைமீது புரண்டு விட்டதுபோன்று துடித்து அலறினாள். அந்த ஊரே அப்படியே தன் வீட்டில் அடைபட்டுக் கிடப்பதையும், தாங்கள் பேராசை கொண்டு காசாசைப் பேய்பிடித்தலைந்து செய்த விபரீதகாரியத்தின் பிரதி பலன்தான் இவ்விரு சோதனைப் பிண்டங்களாக வந்து சந்நிதிக்க வைத்துவிட்டது என்றதை அறிய அறிய ஸாவித்திரிக்குத் தன் உயிர் உடனே போய்விடக் கூடாதா என்ற உணர்ச்சி பலமாக எழுந்து போராடியது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. 1.

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். 2.

என்கிற திருக்குறளின் வாக்கை பொய்யாகச் செய்ய முடியுமா? தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்றபடி

தான் யாவும் முடியுமென்று அவ்வூர் புரோகிதர் இக் குழந்தைகளைப் பார்த்துக் கூறியது ஸாவித்திரியின் செவியில் படாமல் இல்லை.

சோதனையைப்போல் அதே சமயம் முன்பு பாடிக்கொண்டே சென்ற பிச்சைக்காரன் அதே பாட்டைப் பாடிக்கொண்டு சென்றான். எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டதால், ஸாவித்திரிக்கு உண்டான சங்கடத்திற்கும் வயிற்றெரிச்சலுக்கும் அளவு கூற முடியுமா?

"வெளியில் சென்ற என் கணவர் எப்போது வருவாரோ! இந்தக் கோராமையை அறிந்தால் என்ன கதி யடைவாரோ! அவராவது சீக்கிரம் வந்துவிட்டால், இந்தக் கூட்டத்தைச் சேரவிடாது தடுத்து ஏதாவது செய்வாரே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் குமுறிப் போய்விட்டாள். "இந்தக் கலியுக விநோத அவதாரங்கள் சீக்கிரம் சாகாதா!" என்ற தவத்தையும் அப்போதே செய்யத் தொடங்கிவிட்டாள்.

*   *   *   *   *

லீலா, தன் பாட்டியுடனும், ஸௌம்யாவுடனும் ஆனந்தமாய் தன் வீடுவந்து சேர்ந்ததும், தன் பாட்டியை தன் மாமியார்களுக்கு அறிமுகப் படுத்திவைத்தாள். கிழவிக்கு உண்டான சந்தோஷம் அபரிமிதமாகப் பொங்கியது; எனினும், தன் பெரிய பிள்ளையின் கதி என்னவாயிற் றென்பதே தெரியாதிருந்த ஓர் விசனமும் சின்ன மகனின் கதி இம்மாதிரி முடிந்த துக்கமும்கூடப் பாதித்துக் கொண்டே இருந்தன.

மரகதத்தை வெட்கமும் துக்கமும் அபாரமாய் வதைத்துக் கொல்லுகின்றன. எனினும் தான் செய்த குற்றத்திற்கு வருந்தி, தாயின் காலில் விழுந்து வணங்கி, கண் கலங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

"உம். யாராயிருந்தாலும் இனி வருந்தி உபயோகமென்ன? இதற்குத்தான் பெரியவர்கள் வார்த்தையை எப்போதும் தேவவாக்காக மதித்து நடக்கவேண்டும். பெரியாரின் அனுபவஞானமும் அன்புமே நமக்குப் பெரிய ஆதாரம். நம் பிறவியிலுள்ள கரடுமுரடான வழிகளை அவர்களின் அபாரமான துணையாகிய எஞ்சின் செப்பனிட்டு வாழ்க்கைப் பாதையைத் தூய்மைப்படுத்திக் கொடுக்கும் என்பதற்காகத்தான்

சமயம்வரி னிடித்துரைப்பார் தக்கவழிச் செலச்செய்வா
ரிமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
யமையவறி வுறுத்துவா ரந்தோநூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்க மரிதரிது. 1.

முத்திக்கு வித்தாகு முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கு நாடோறுந் தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளுஞ் செப்பரிதா லதுநிறக
வெத்திக்கும் புகழுநினக் கியன்மணநன் காயிற்றே. 4

—குசேலோபாக்கியானம்.

என்று பெரியார்கள் கூறியிருக்கிறார்கள். இதை முதலில் சற்றும் லக்ஷியம் செய்யாதவர்களின் கதி இதுதான் என்பது உங்கள் குடும்பத் தலைவியினுலேயே உங்களுக்குப் பாடமாயிற்று. என் அருமை பொக்கிஷமாகிய பாட்டியை நான் என் உயிரினுமினிய பொருளாக மதித்ததனுல்தான் இன்று இந்த நிலைமையிலாவது இருக்கிறேன்" என்று லீலா தைரியமாயும் சமயோசிதமாயும் கூறினுள். எல்லோரும் இதுகேட்டு வியந்தார்கள்.

சில தினங்கள் சென்றன. ரத்தினசாமி அபகரித்த சொத்துக்களைத் தர்மத்திற்காக லீலாவதி திருப்பிக் கொடுத்தும், அவன் மோசஞ்செய்த குற்றத்திற்காக அவனையும், அதற்கு உடந்தையாயிருந்ததற்காக சுந்தரியையும் தண்டித்துவிட்டார்கள். வினை விதைத்தவன் வினையை அறுத்துத்தானே தீரவேண்டும். இதை யறிந்திருப்பதனுல் லீலாவோ கிழவியோ அதே ஏக்கத்தில் மூழ்கவில்லை.

வழக்கம்போல் கிழவிக்கு ஸௌம்யா பத்திரிகை படித்துச் சொல்வதை இங்கும்விடாது நடத்திவந்தாள். ஒரு தினம் பத்திரிகையில் கண்ட செய்தி, எல்லோரையும் பிரமிக்கச் செய்துவிட்டது. அதை மீண்டும் ஸௌம்யா படிக்க எல்லோரும் கேட்கலானுர்கள்.

"கலியுகத்தில் அவதார புருஷரென்று பல்லாயிரக் கணக்கான ஜனங்களால் போற்றிக் கொண்டாடிவரும் துப்பறியும் நிபுணர், ஸ்ரீமான். ராஜாராம் நாயுடுகாரு இதுவரையில் செய்துள்ள வேலைகளின் எண்ணிக்கை கூறவே திறமல்ல. அவருடைய அபாரமான உழைப்பினுல் நன்மை அடைந்த மக்களின் தொகையும் அளவிட்டுச் சொல்லி முடியாது. தீயோரை நசுக்கித் தூயோரைக் காத்தலே அவருடைய பிறவியின் தொழிலாக அமைந்துவிட்டது.

சிற்றேரி என்கிற கிராமத்தின் வாசியாகிய ஸ்ரீமான் முத்துச்சாமி என்பவரும் அவரது தர்மபத்தினியும் பணம், பணம் என்ற ஒரே ஆசைக்காக அவர்கள் செய்துவந்த அக்ரமங்கள் கணக்கிட முடியாது. அந்த மனிதன் ஒரு கள்ளச்சாமியாருக்கு மூன்று தலைமுறை தலைச்சனுன கர்ப்பிணியைத் தேடித் தருவதாய் வாக்களித்து 10 ஆயிரம் ரூபாயும் லஞ்சம் பெற்றுனும்.

இந்த விஷயம் குசமுசவென்று ஊர் முற்றும் பரவிவிட்டதால், இதைச் சிலர் போலீஸாருக்கும் எட்டவைத்திருந்தார்களாம். போலீஸாரும் சரியான ஆதாரம் கிடைக்கும் சமயத்தையே எதிர்பார்த்

திருந்தார்களாம். இந்த அக்ரமத்தையும் சண்டாளத்தனத்தையும் கண்டு சகியாத அந்த மனிதனின் தாயார் தற்கொலையும் செய்து கொள்ளத் துணிந்துவிட்டாளாம்.

தற்செயலாய் அவளை ஒரு பெண் காப்பாற்றினளாம். அந்தக் கிழவி தான் பெத்தமனம் தாளாது தன் கடமையைச் செய்ய எண்ணித் தனக்கு உதவிபுரியும் பெண்ணின்மூலம் நமது நாயுடுவைக் கண்டு விஷயத்தைக் கூறி, எப்படியாவது ஒரு கர்ப்பிணியைக் கொல்லாது காப்பாற்றுவதுடன் அந்த ரகஸ்யத்தையும் அறியும்படியாக வேண்டிக் கொண்டாளாம்.

நாயுடு தன் ஸ்வீகாரப் புத்திரியாகிய ஸ்ரீமதி அம்புஜத்தை கர்ப்பிணியாக மாற்றித் தமது கையாட்களின் உதவி மூலம் முத்துச் சாமியிடம் சென்று அந்தச் சாமியாரிடமும் போய்விட்டாராம்.

பஞ்சுப்புதரில் தீ வைத்தபிறகு அது எரியாமல் இருக்குமா? சாமியார் என்கிற வேஷத்தில் இருப்பவன், ஏற்கெனவே நமது நாயுடுவால் ஒருகாலத்தில் தண்டிக்கப்பட்ட ஆசாமி. விடுதலை அடைந்ததும் இம்மாதிரி சாமியார்போலிருந்து உலகத்தை ஏமாற்றி வருகிறுன் என்பதை உடனே கண்டு பிடித்துவிட்டார்.

கர்ப்பிணியை அழைத்துச் சென்ற அன்று இரவு தக்க போலீஸ் பந்தோபஸ்துகள் செய்திருந்து சமயத்தைப் பார்த்துக்கொண்டிருந் தாராம். அந்தச் சாமியார் விஷநிவாரணி எண்ணெய் செய்வதற்காக பலவிதமான மூலிகைகளையும், பச்சிலைகளையும், ஆடுமாடு முதலிய ஜந்துக்களையும் அந்த எண்ணெய்க்கு உபயோகிப்பதுடன் மூன்று தலை முறை தலைச்சன் கர்ப்பிணியையும் மந்திர தந்திரத்துடன் உபயோகிப்பதற்காக இம்மாதிரி ஏற்பாடு செய்திருப்பதையும் கண்டு பிடித்துவிட்டாராம்.

நள்ளிரவில் பூஜையில் உட்காரவைப்பதாக கர்ப்பிணியைச் சாமியார் தனியாக அழைத்துச் சென்றுராம். கர்ப்பிணியாக நடிப்பவள் சாமானியப்பட்டவளா! துப்பறியும் நிபுணியல்லவா? மடியில் ரிவால்வர் தயாராக வைத்திருந்தாளாம்.

இவளைச் சாமியார் தூக்கிக்கொண்டுபோய் பின்புறத்திலுள்ள ஓர் ரகஸியமான பாதாள அறைக்குச் சென்றுனும். அங்குப் பிரம் மாண்டமான இரும்பு கொப்பரையில் எண்ணெய் காய்ந்துகொண் டிருந்ததாம். அதில் தன்னைப் போடுவதற்காகத்தான் தூக்கிக் கொண்டு போகிறுன் என்பதை அறிந்த அம்புஜம் மயங்கிக் கிடப்பவள்போலவே பாசாங்கு செய்து திடீரென்று அந்தச் சாமியாரின் கையிலிருந்து திமிறிக்கொண்டு தபீரென்று குதித்து, தன் மடியில் ஒளித்துவைத்திருந்த ரிவால்வரை எடுத்து அந்தச் சந்நியாசி பதறிப் போகும்படி பொறி தட்டும் நேரத்திற்குள் அவனது இரு கால் களிலும் டப்டப்பென்று சுட்டுவிட்டாளாம்.

அடுத்தக்ஷணமே ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி அங்கு நாயுடு உள்பட பல போலீஸ்காரர்கள் சூழ்ந்துகொண்டு எல்லோரையும் கைதியாக்கிவிட்டார்களாம். சோதனைப் போட்டதில் கள்ள நோட்டுகள் செய்வதையும், கள்ள நாணயங்கள் செய்வதையும் கண்டு பிடித்துவிட்டார்களாம்.

முத்துச்சாமி மீதித்தொகையை ஆனந்தமாக வாங்கிக்கொண்டு வெளியே வரும்போது போலீஸார் அவனைக் கைது செய்துகொண்டு போய் ரகஸியமாக வைத்திருந்தார்களாம். இரவு மற்றவர்களைப் பிடித்தபிறகு எல்லோரையும் ஒன்று சேர்த்து விட்டார்களாம்.

இன்னொரு கலியுக விந்தை. முத்துச்சாமியின் மனைவி கர்ப்பிணியாய் இருந்தாளாம். அவள், முத்துச்சாமி முன் கூறப்பட்ட கர்ப்பிணியை அழைத்துச் சென்ற மறுதினமே இரட்டைக் குழந்தைகளைப் பிரஸவித்துவிட்டாளாம். ஒன்று ஆஞ்சநேய அவதாரமாகவும் மற்றொன்று முகத்தில் எந்த உருப்புமில்லாத முண்டம் போலவும் இருந்ததாம்.

குழந்தைகளின் பயங்கரப் பிறவியைப் பார்த்ததும், பிரஸவித்தவளுக்கு மன அதிர்ச்சியினால் மூர்ச்சையாகிவிட்டதாம். துரதிருஷ்டவசத்தால் அந்த விநோதப் பிறவிகள் மூன்று நாட்கள் உயிருடன் இருந்தனவாம்; பிறகு இறந்துவிட்டனவாம். இந்த மனவேதனையின் பயனாய்ப் பிரஸவித்தவளுக்குக் கடுமையான ஜுரம் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் சிகிச்சை செய்தும் பயன்படாது நேற்று மாலை இறந்துபோய் விட்டாளாம்.

முத்துச்சாமிக்கும் இந்தத் தகவல் தெரிந்து, தான் செய்த பாவத்தின் பிரதிபிம்பந்தான் இம்மாதிரி விபத்துக்களாக மூண்டது என்று கண்ணீர் வடித்துக் கலங்குகிறான்...

என்ற விஷயங்களைப் படிக்கக் கேட்டதும் கிழவிக்கு தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும் என்றபடி வயிற்றில் சங்கடஞ் செய்து கண்ணில் ஜலம் வந்துவிட்டது. "என் மக்கள் இருவருக்கும் இத்தகைய கதியா வரவேண்டும்? என் வயிறு செய்த பாவமா? என் கண்கள் செய்த கொடுமையா?" என்று அலறினாள்.

[முக்கிய குறிப்பு: மூன்று தலைமுறைத் தலைச்சன் கர்ப்பிணி விஷயமாக உள்ளதை 'இப்படியும் நடக்குமா? இது வெறும் அநியாயம்' என்று சிலர் வியப்புறலாம். ஆனால், எனது சிநேகிதை ஒருத்தியின் குடும்பத்தில் பல வருஷங்களுக்கு முன்பு இம்மாதிரியான ஓர் பயங்கரச் செய்கை நடந்தது. அதில், அந்தக் கர்ப்பிணியை அப்படியே பலி கொடுத்துக் காய்ச்சிய எண்ணெயை மேற்குறித்த சிநேகிதையின் வீட்டில் நான் என் கண்ணால்

நேரில் கண்ட போது, இந்தப் பயங்கரவிஷயத்தை கூறக் கேட்டு, நடுநடுங்கிப் போனேன். தேள் கடி, பாம்புக் கடி, இன்னும் மற்ற இதர விஷஜந்துக்கள் கடி, வெட்டு காயம், ரணம் முதலியவைகளுக்கு அந்த எண்ணெயைத் தடவினால், கை கண்ட பலனாம். அந்தக் கொலைபாதகம் நிறைந்த எண்ணெயை என் சிநேகிதி தன் கையால் கூடத் தீண்டவும் வெறுத்தாள். இம்மாதிரி நடக்கும் கொடிய பயங்கர விஷயங்களைத் தான் எழுதி ஜனங்களுக்கு விளக்க வேண்டுமென்பது எனது அவா. இது போல, பல உண்மைகளைச் சேகரித்துப் பின்னர் அவற்றை ஒரு கற்பனைக் கதையாக்குவதில்தான் ருசி அதிகம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

வை. மு. கோ.]

லீலாவும், ஸௌம்யாவும் தங்கம்மாளைத் தேற்றி "அவரவர் விதியை அவரவர் அனுபவிக்காது விடமுடியுமா? இதற்கு நீ வருந்தி என்ன பயன்? இம்மாதிரி வரும் என்பதைச்சற்றும் அஞ்சாது செய்பவர்கள் கதி இதுதான்" என்று சமாதானங்கூறினார்கள். பரதேசியாய் நின்ற முத்துச்சாமியின் குழந்தைகளையும் லீலாவே இங்கு கொண்டு வைத்துக் காப்பாற்றத் தொடங்கினாள்.

இத்தனை துக்ககரமான விஷயங்களுக்கு மத்தியில் கிழவியின் மனத்திற்குச் சற்று ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுத்ததானது ஸௌம்யாவுக்கு விவாகஞ்செய்து வைத்ததேயாகும். தண்டனையடைந்தவர்களும், உயிர் நீங்கியவர்களும் போக மற்ற பேர்கள் தற்சமயம் லீலாவதியிடமே அடைக்கலமாகிவிட்டனர். ஆதிகாலம் முதல் தன் பாட்டியால் அறிந்த அநேகவிதமான நீதிகளையும், அனுபவத்தையும் தனது ஜமீன் விஷயத்தில் வெகு மும்முரமாகப் பயன்படுத்தி அபாரமாய் விசித்திரமான மாறுதல்களுடன் நடத்தவாரம்பித்தாள்.

தங்கம்மாளின் காலக்ஷேபமும், பக்திமார்க்கமும் பழயபடி முன்போல ஆரம்பமாயிற்று. லீலாவின் குழந்தையுடன் கொஞ்சி விளையாடும் இன்பத்தில் அவள் திளைந்தாள். அந்த ஆனந்தத்தில் லீலாவின் மாமிமார்களும் கலந்துகொண்டு 'நான், நீ' என்ற போட்டியும் வலுத்தது. இதைவிட வேறு ஆனந்தமும் நித்யகல்யாண வைபவ சுகமும் உலகில் வேறு என்ன இருக்கிறது?

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. —திருக்குறள்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

### எழுதிய நாவல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **1925** | | |
| 1. வைதேகி | 2 | 8 |
| **1926** | | |
| 2. பத்மசுந்தரன் | 2 | 8 |
| **1927** | | |
| 3. சண்பகவிஜயம் | 1 | 12 |
| 4. ராதாமணி | 2 | 8 |
| **1928** | | |
| 5. கௌரீமுகுந்தன் | 1 | 12 |
| 6. நவநீதகிருஷ்ணன் | 2 | 0 |
| **1929** | | |
| 7. கோபாலரத்னம் | 0 | 14 |
| 8. மாதவமணி | 0 | 3 |
| 9. சாருலோசனு | 2 | 8 |
| **1930** | | |
| 10. சுகந்தபுஷ்பம் | 1 | 0 |
| 11. வீரவஸந்தா | 0 | 8 |
| 12. சாமளநாதன் | 2 | 0 |
| 13. ருக்மிணிகாந்தன் | 2 | 0 |
| **1931** | | |
| 14. ஸாரமதி | 1 | 12 |
| 15. நளினசேகரன் | 0 | 8 |
| **1932** | | |
| 16. பரிமளகேசவன் | 1 | 4 |
| 17. மூன்று வைரங்கள் | 0 | 8 |
| 18. உத்தமசீலன் | 1 | 4 |
| 19. கதம்பமாலை | 0 | 12 |
| **1933** | | |
| 20. காதலின் கனி | 2 | 8 |
| 21. சோதனையின் கொடுமை | 1 | 8 |
| 22. படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 |
| **1934** | | |
| 23. தியாகக் கொடி | 2 | 0 |
| 24. ஜெயஸஞ்சீவி | 0 | 4 |
| 25. பக்ஷமாலிகா | 0 | 6 |
| 26. புத்தியே புதையல் | 0 | 14 |
| **1935** | | |
| 27. மங்களபாரதி | 2 | 0 |
| 28. பட்டமோ பட்டம் | 0 | 10 |
| 29. சுகுணபூஷணம் | 0 | 4 |
| 30. பிச்சைக்காரக்குடும்பம் | 0 | 8 |
| 31. ஆனந்தஸாகர் | 0 | 8 |
| 32. அம்ருததாரா | 0 | 4 |
| **1936** | | |
| 33. இன்பஜோதி | 1 | 4 |
| 34. ராஜமோஹன் | 1 | 4 |
| 35. அனாதைப் பெண் | 1 | 4 |
| 36. ப்ரேமப்ரபா | 0 | 8 |
| **1937** | | |
| 37. அன்பின் சிகரம் | 0 | 4 |
| 38. சாந்தகுமாரி | 1 | 0 |
| 39. மாயப்ரபஞ்சம் | 1 | 0 |
| 40. சந்திரமண்டலம் | 1 | 0 |
| **1938** | | |
| 41. வாழ்க்கையின் நாதம் | 1 | 4 |
| 42. உளுத்த இதயம் | 0 | 4 |
| 43. மகிழ்ச்சி உதயம் | 0 | 10 |
| 44. ஜீவியச் சுழல் | 1 | 4 |
| 45. மாலதி | 0 | 8 |
| 46. வத்ஸகுமார் | 0 | 8 |
| **1939** | | |
| 47. கஸ்தூரிதிலகம் | 1 | 4 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

183037

## கஸ்தூரி திலகம்

3-வது இதழில் தெரிவித்தபடி, இதன் முதல் இதழின் மறு பதிப்பு ஜனவரியிலேயே அச்சிடப்பட்டது நேயர்கள் அறிந்த விஷயம். அதுவும் இன்னும் சில இதழ்களும் செலவாகிவிட்டதால், கதை முழுதும் இரண்டாம் பதிப்பு தயாராகிவிட்டது. இப்போது புதிதாகச் சேரும் நேயர்களுக்கு இவ்வாண்டின் முதல் இதழிலிருந்தே சஞ்சிகைகளை அனுப்புவோம்.

## ஒரு வருஷ சஞ்சிகையும் இதர நாவல்களும் இனமாக வேண்டுமா ?

1. மூன்று புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புவோருக்கு ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

2. எத்தனை புதிய சந்தாநேயர்களைச்சேர்த்து முன் பணம் நமக்கு அனுப்புகிறீர்களோ அத்தனை எட்டணு விலையுள்ள நாவல் இனம்.

உதாரணமாக 4 சந்தாநேயர்களைச்

சேர்த்தால், ரூ. 2 விலையுள்ள தியாகக்கோடி இனம்.

## சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை

நமது நாவல்களைச் சந்தாநேயர்களுக்குக் கீழ்க்கண்ட விவரப்படி குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

| ரூ. அ. | | ரூ. அ. | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|---|---|
| 2—8 | நாவல்கள் | 2—0 | 1—0 | நாவல்கள் | 0–14 |
| 2—0 | ,, | 1–12 | 0–14 | ,, | 0–12 |
| 1–12 | ,, | 1—8 | 0–10 | ,, | 0—8 |
| 1—8 | ,, | 1—4 | 0—8 | ,, | 0—6 |
| 1—4 | ,, | 1—0 | | | |

புத்தகங்களின் விலையுடன் தபாற்செலவுக்காக ரூபாய்க்கு 2 அணு விதம் சேர்த்து முன்பணமாகவே அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

"JAGANMOHINI" Vol. XVI No. 10 Regd. No. M. 2210




தலைவலிக்கு




ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St, Triplicane, Madras.